Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 10 புதன்கிழமை (25.07.2012) பக்கங்கள் 20 ஓசை - 298

கபிஸ்னா கூல் பார் & உணவகம்



திருமண சொகுசு கார்
ஹயேஸ் வான்
ஆட்டோ







(C/1626)
யாழ்-கொழும்பு
A/C வான்சேவை
சந்நிதி வீதி,
பஸ் நிலையம் அருகாமை, அச்சுவேலி.
0773618014
0779361339
0213213021



விவசாயிகளுக்கு மானிய உரம் (04)




என்னதான் நடக்குது? (13)



சூரியன் உதிக்காமல் போனால்... (12)



கொலை மிரட்டல் (18)



ரப்பர் ஸ்டாம் அல்ல! (05)

## பறிபோனது தங்கச் சங்கிலி

(நல்லூர்)

நல்லூர்க் கந்தன் ஆலயக் கொடி யேற்றத்திருவிழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று நல்லூர் ஆலயத்திற்கு வருகை தந்திருந்த பக்தர் ஒருவரின் நான்கு பவுண் தங்கச் சங்கிலி காணாமல் போயுள்ளதாக தமக்கு முறைப்பாடு கிடைத் துள்ளதாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

# ஆஸி.நோக்கிய கடற்பயணம் நடுக்கடலில் கைதானோருக்கு வழக்கு

**23 பேர் யாழ். வாசிகள்**

வெளிநாடு செல்லும் நோக்கில் சட்டவிரோமாக இலங்கையில் இருந்து சென்ற 68 பேர் கடந்த 19 ஆம் தகதி இலங்கைக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 23 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய வழக்கு (B 3344/12) நாளை கொழும்பு பிரதான நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

வழக்கில் சம்பந்தப்பட்ட குடாநாட்டிலிருந்து சென்ற 23 பேரின் விபரங்கள் யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களது விபரம் வருமாறு:

செல்வலிங்கம் சதீஸ் (வயது-25), மகான் மகான்கந்தன் (வயது-33), கதிரமலை ஜெகநாதன் (வயது-25), அழகரத்தினம் ரகுனண் (வயது-32), செல்வராசா ஜெயராசா (வயது-37), செல்லத்துரை செல்வவேந்திரன் (வயது-53), வெள்ளிமயில் தங்க முருகன் (வயது-27), இராசரத்தினம் லோகேஸ்வரன் (வயது-33), இராசலிங்கம் நவநீதன் (வயது-32), துரைச்சாமிவதன் (வயது-29), சசிகரன் (வயது-23), வீரவாகு நகுலன் (வயது-32),

(19) ஆம் பக்கம் பார்க்க

## இளவாலையில் வெளிநாட்டவர் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுற்றுலா விசாவில் வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட மூன்று வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.இளவாலைப் பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# தொழில்துறை விருத்திக்கு விசேட செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆகியவற்றுக்கான விசேட செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக வடபகுதியில் சாத்தியமான தொழிற் பயிற்சிகள் தொடர்பான செயற்திட்ட வரைபொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு அம்சமாக யாழ்.பொது நூலகத்தில் விசேட மாநாடு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் நிதி அனுரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தச் செயற்றிட்டத்தை இளைஞர் விவகாரத் திறன்கள் விருத்தி அபிவிருத்தி அமைச்சு முன்னெடுத்துச் செல்லவுள்ளது.

இளைஞர்கள் விவகார ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் எச். எஸ். சுரவீர தலைமையில் யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்ற விசேட செயலமர்வில் மேற்படி செயற்றிட்டம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## தடுப்பூசி ஏற்றல் ஸ்தம்பிதம்

நாடளாவிய ரீதியில் குடும்ப சுகாதார சேவை தாதிமார்கள் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளனர். மூன்று கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அரச குடும்ப சுகாதார சேவை தாதிமார் சங்கத்தின் பிரதி பிரதம செயலாளர் தேவிகா கொடிதுவக்கு குறிப்பிட்டார்.

சீருடைக்கான கொடுப்பனவு மற்றும் அலுவலகக் கொடுப்பனவு என்பவற்றை உயர்த்துமாறும், எரிபொருள் கொடுப்பனவை வழங்குமாறும் அந்தச் சங்கத்தினர் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச கண்காணிப்பு கிழக்கில் வேண்டும்

## கூட்டமைப்பு கோருகிறது

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. கடந்த மாகாணசபைத் தேர்தல்களின் போது மட்டக்களப்பு, மாவட்டத்தில் குற்றச் செயல்கள் இடம்பெற்றன. அவ்வாறான சம்பவங்கள் இம்முறையும்

(19) ஆம் பக்கம் பார்க்க

# மண்டைதீவு வீதிகளுக்கு சூரியக்கல மின் விளக்குகள்

மண்டைதீவு கிராமத்திற்கு சூரியக் கதிரினால் இயங்கக் கூடிய மின்விளக்குகள் அடுத்த வாரம் முற்பகுதியில் வேலணைப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் பொருத்தப்படவுள்ளது.

வேலணைப் பிரதேச சபையினது குறித்துரைக்கப்பட்ட நிதியிலிருந்து 10 சூரியக் கதிரால் இயங்கக்கூடிய விளக்கானது வேலணை பிரதேசசபையினால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. முக்கிய பத்து இடங்களுக்கு இந்த விளக்குகள் பொருத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவு கிராமத்திற்கு இலங்கை மின்சார சபையினரால் இது வரை மின்சார இணைப்புக்கள் வழங்காதிருந்த போதும், இவ்வாறான சூரியக்கதிர் மின் விளக்குகள் மண்டைதீவுக்கு கிடைத்திருப்பது ஒரு வரப்பிரசாதம் என மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர். (05)

# கடற்றொழில் அபிவிருத்தி வடக்கில் விரிவுபடுத்த திட்டம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் கடற்றொழிலை விருத்தி செய்து மீன் உற்பத்தியினை அதிகரிப் பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுவதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் வட மாகாண மீன் உற்பத்தியில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதற்கு ஏற்ற வகையில் 22 மீன்பிடி படகுகள் அத்தியாவசிய மீன்பிடி உபகரணங்கள் உட்பட 15 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் இடையே அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் வட மாகாண மீனவர்கள் நாட்டின் 43 சதவீத மீன் உற்பத்தியினை மேற்கொண்டார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீன் பிடித்துறையினை மேம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவர்கள் பகிஷ்கரிப்பு ஸ்தம்பித்தது மருத்துவமனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று ஒரு நாள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு எதிராகவும், தமக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவும் நேற்று 8.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை அவர்கள் யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர்

(19) ஆம் பக்கம் பார்க்க



நல்லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நேற்று விசேட முத்திரையும், கடித உறையும் வெளியிடப்பட்டது. நல்லூர் ஆலய முன்றலில் நேற்றுக் காலை நடைபெற்ற கொடியேற்றத் திருவிழாவின் போது இந்த முத்திரை வெளியிட்டப்பட்டது. வட மாகாண சபையும் அஞ்சல் திணைக்களமும் இணைந்தே இந்த முத்திரையினை வெளியிட்டனர்.(02)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய உதவியுடன் துவிச்சக்கர வண்டிகள்



(கிளிநொச்சி)

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் அரசினாலும் ஏனைய தொண்டு நிறுவனங்களாலும் வழங்கப்பட்டு வருகின்ற உதவிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளதால் தகுதியான எல்லோரையும் பயனாளிகளாக தெரிவுசெய்ய முடியாத நிலை தோன்றியுள்ளதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி ஜெயபுரம் பிரதேசத்தில் இந்திய அரசினால் அன்பளிப்புச்செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

தற்போதைய சூழ்நிலையில் மீள்குடியேறியுள்ள பெரும்பாலான மக்கள் அனைவருக்கும் உதவித் திட்டங்கள் அவசியமானதாகக் காணப்படுகின்ற போதிலும் அதில் எல்லோரையும் பயனாளிகளாகத் தெரிவதில் அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். காரணம் மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளே கிடைக்கப்பெறுகின்றன.

எனவே முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு உதவித்திட்டங்களுக்கும் பயனாளிகள் தெரிவுகள் இடம்பெறுகிறது. ஒரு உதவித்திட்டத்திற்கு எல்லோரையும் பயனாளிகளாக உள்வாங்க முடியாது போயினும் ஒரே பயனாளிக்கு எல்லா உதவித்திட்டங்களும் சென்றடைய போவதுமில்லை எனவே மக்கள் இதில் குழப்பம் அடையத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று ஜெயபுரம் பிரதேசத்தில் ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளில் 305 பயனாளிகளுக்கு இந்திய அரசின் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார், உதவித் திட்டப்பணிப்பாளர் ஈழ மக்கள் ஜனநாயகட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் நிர்மல றொபின்சன் மற்றும் ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவன உத்தியோகத்தர்கள் கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தென்பகுதி கஞ்சா வியாபாரிகளுக்கு யாழ். நீதிமன்றில் வழக்கு

(திருநெல்வேலி)

கஞ்சா வைத்திருந்ததாக தென்பகுதியைச் சேர்ந்த இருவருக்கு யாழ். நீதிமன்றம் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தது.

கம்பஹா - பஸ்வலவைச் சேர்ந்த ஒருவரும், மாத்தளை வீதி, புத்தகுளம் என்னும் இடத்தைச் சேர்ந்த மற்றொருவரும் யாழ்ப்பாணம் தபால் கந்தோருக்கு அண்மையில் தலா 10 கிராம் கஞ்சா வைத்திருந்ததாக யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நேற்று வரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

நேற்று இவ்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (137)

## லலித், குகன் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் காணாமற்போன மக்கள் போராட்டக் குழுவைச் சேர்ந்த லலித் மற்றும் குகன் ஆகியோரது வழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மனுதாரர் பொலிஸாருக்கு அளித்த முதல் முறைப்பாட்டுப் பிரதி தங்களுக்குக் கிடைக்கவில்லை எனவும், அது கிடைத்தவுடன் விளக்கத்துக்காக தாங்கள் ஆயத்தமாக இருப்பதாகவும் நீதிமன்றுக்கு சமர்ப்பணம் செய்தனர்.

இதனையடுத்து முறைப்பாட்டுப் பிரதிகளை வழங்குமாறு அச்சுவேலி மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு நீதவான் மா. கணேசராசா உத்தரவிட்டார்.

சாட்சிப் பட்டியலைச் சேர்ப்பதற்கு மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுப்பதாக மன்றுக்கு உத்தரவாதமளித்தனர்.

இவ்வழக்கில் மக்கள் போராடடக் குழுவைச் சேர்ந்த லலித், குகன் ஆகியோர் சில மாதங்களுக்கு முன்னர் ஆவரங்காலிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது இடையில் மர்மமான முறையில் காணாமற்போயிருந்தனர்.

இவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு உரிய தரப்பினரிடம் இவர்களது குடும்பத்தினர் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் இவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் குகனின் மனைவி கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். யாழ். நீதிமன்றில் இதனை விசாரணை செய்யுமாறு உயர் நீதிமன்றம் யாழ். நீதவானுக்கு அறிவித்தல் விடுத்திருந்தது. இதனையடுத்து யாழ். நீதிமன்றம் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

இராணுவத் தளபதி, பொலிஸ் மா அதிபர், அச்சுவேலிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, குகனின் மனைவி ஆகியோரை நீதிமன்றில் சமுகமளிக்குமாறு யாழ். நீதிமன்று அறிவித்தல் விடுத்திருந்தது.

வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19, 20 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. தொடர் விளக்கத்துக்கு இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் விரைவாக விசாரணையைத் தொடர்வதற்கு இரு பகுதியினருக்கும் அறிவுறுத்தல் விடுத்து வழக்கை நீதவான் ஒத்தி வைத்தார். (137)

## நல்லூர் ஆலய சூழலில் இன்றைய ஆன்மீக நிகழ்வுகள்

(நல்லூர்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆத்மீக சிந்தனைச் சமயச் சொற்பொழிவில் இன்று 'முருகன் பெருமை' என்ற தலைப்பில் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து நடைபெறும் கலை நிகழ்வுகளில் தொல்புரம் ஆதி முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை, கோண்டாவில் வேத பாராயண அறநெறிப் பாடசாலை, ஊர்காவற்றுறை தீம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகள் மாலை 3.00 - 6.00 மணிவரை நடைபெறவுள்ளது.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் மாலை 6.45 - 7.40 வரையும் திருமுறைக் கச்சேரியில் எஸ்.நித்தியானந்தனின் பாட்டு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு வயலினை திருமதி வனஜா ஈஸ்வரசர்மாவும், மிருதங்கம் பிரம்மஸ்ரீ என்.சிவசுந்தரசர்மாவும், கெஞ்சிரா ரி.சண்முக சுந்தரமும் இசைக்கவுள்ளனர். (42)

## தெய்வீகப் பேருரை

(நல்லூர்)

நல்லைக் கந்தன் மஹோற்சவத்தினையொட்டி நல்லூர் வடக்கு வீதியிலுள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் தெய்வீகப் பேருரை நிகழ்வுகள் மாலை 6.30 மணி முதல் 8.00 மணிவரை நடைபெற்று வருகின்றன.

இன்று 'வள்ளி திருமணம்' எனும் விடயத்தில் அராலியூர் கே.மங்களமூர்த்தியும், நாளை 'திருவாசகத்தேன்' எனும் தலைப்பில் இளம் சைவப்புலவர் சறோஜினி சிவஞானமும் நாளைமறுதினம் 'சிவகதிதானே' எனும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர். (60)

## சிகிச்சைப் பிரிவுகள் இன்று இயங்கும்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று நடைபெறவிருந்த கிளினிக்குகள் இன்று நடைபெறுமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.


நேற்றைய தினம் வடக்கு மாகாணம் முழுவதும் நடைபெற்ற வைத்தியர்களின் ஒருநாள் வேலை நிறுத்தத்தை அடுத்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறவிருந்த கிளினிக்குகள், வெளிநோயாளர் பிரிவுகள் இயங்கவில்லை.

அவசர நோயாளர்கள் மட்டும் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். சிகிச்சைக்கு வருகை தந்த ஆயிரக்கணக்கான நோயாளர்கள் திரும்பிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

நோயாளர்கள் இதுபற்றித் தெரிவிக்கையில், இப்படியான புதுப் பிரச்சினைகளால் நோயாளர்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அரசும் உரிய அதிகாரிகளும் பொதுப் பிரச்சினைகளுக்கு நீதியான தீர்வினைக் கண்டு சரியான தீர்வுகளை விரைவில் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். (11)

## நல்லூர் கந்தனின் மஹோற்சவம் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் திரண்டனர்





வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. காலை 10.00 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம் பெற்று கொடி ஏற்றப்பட்டது.

தொடர்ந்து முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் உள்வீதியை வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

இந்த கொடியேற்றத்தைக் காண்பதற்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முருகப்பெருமானின் அருளைப் பெற்றனர். (02)


## யாழ்ப்பாணம் மாநகர சபை அறிவித்தல்

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமானதும் பின்வரும் காரணங்களால் இதுவரை வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்கப் படாததுமான சந்தைக் கடைகள் மீளக் கேள்வி கோரி குத்தகைக்கு விடப்படவுள்ளன. இது தொடர்பாக ஆட்சேபணை செய்ய விரும்புபவர்கள் 2012.08.21 ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம், எனும் முகவரிக்கு மாநகர சபைக்கு இரு பிரதிகளில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. வியாபாரம் ஆரம்பிக்காது தொடர்ந்து பூட்டப்பட்டுள்ள கடைகள்.
2. வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்காத கடைகள்.
3. 3 மாதங்களுக்கு மேல் வாடகை செலுத்தாமல் நிலுவையிலுள்ளதுமான கடைகள்.

**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,**
**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C/1627)

# கல்விமுறையில் ஏற்படும் மாற்றமே உயர்கற்றலுக்கு அவசியமானது

## இளைப்பாறிய அதிபர் நடராசா

(பருத்தித்துறை)

நவீனத்துவத்தின் நுழைவாயில் கதவுகளைத் திறக்கும் திறவுகோல் கல்வியாகும். ஒரு நாட்டின் தேசிய முயற்சிக்கு கல்வி அடிப்படையானது. அரசியல் பொருளதார சமூகமாற்றங்களுக்கு கல்வி ஒரு வலுவான சாதனம். நாட்டின் அபிவிருத்தி திட்டங்கள் பாடசாலைகளில் இருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். பாடசாலைகள் பல்வேறுபட்ட ஆளுமைகளைக் கொண்ட துடிப்புள்ள ஒரு சமூகமையமாக அமையவேண்டும். என உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் கே.நடராசா தெரிவித்தார்.


உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரி அதிபர் கே.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

காலமாற்றங்களுக்கும் தேசத்தின் தேவைகளுக்கு மேற்ப கல்விக்கொள்கையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். நமது கல்விக்கொள்கையில் கல்வி சீர்திருத்தம் என சில மாற்றங்கள் செய்யப்பட்டனவே தவிர அடிப்படைக்கல்வியில் மாற்றங்கள் செய்யப்பட வில்லை. இதுவே இன்றைய நிலைக்கும் காரணமாகும். சமகால சமுதாயத்தில் எழும் பிரச்சினைகளை சமாளிக்க கூடிய வல்லமையும், திறனுமிக்கவர்களாக இன்றைய இளைஞர்களைத் தயார்ப்படுத்தக் கூடிய கல்வியே இன்று வேண்டும்.

தொழில்நுட்பம், தொழில் நுணுக்க முறைகளை மாணவர்களுக்குப் போதிப்பதோடு தேசப்பற்றும் ஊட்டப்பட வேண்டும். நவீன கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள், செயன் முறைகள் நாட்டு மக்களிடையே பரவி நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், தேசவளங்களைக் கண்டுபிடிப்பதற்கும், உற்பத்திப் பெருககத்திற்கும் உதவும் வகையில் விஞ்ஞானக்கல்வியும், விஞ்ஞானத்தொழில்நுட்ப அறிவும் பாடவிதானத்தில் முக்கிய இடத்தைப்பெறவேண்டும்.

முன்னர் தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இன்று ஆங்கில மொழிக்கல்வி பற்றி பேசுகிறோம். எனவே இன்றைய கல்வி முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமே எதிர்கால சந்ததியினரின் வாழ்வை வளப்படுத்துவதோடு நாட்டின் அபிவிருத்தியையும் மேம்படுத்த முடியும் என்றார். (01)

# நல்லூர் முருகனுக்கு இன்று 2ஆம் திருவிழா



## பெருமை நல்லூரானுக்கே!

முருகா நீ எம் நெஞ்சுக்குள்ளே
குடியிருக்கின்றாய் நாம் நல்லூரில்
தினம் தினம் சுற்றிச் சுற்றி
அடி அழிக்கின்றோம் மலர் சூடி
பாமாலை பாடுகின்றோம் பேசும்
தெய்வமே நின் இறையருளால்
சித்தர்கள் உலாவி வாழ்ந்த
பெருமை நல்லூரானுக்கே.

-கனகராசா- (நல்லூர்)

## வினைதீர்க்கும் முருகா!

வீதி வலமாக வந்தவினை தீர்க்கின்ற
சோதி முகங்காணச் சோகம்போம் - பீதியெலாம்
தூசாகி இன்பச் சுடர்வீசும் நல்லூரான்
ஊசாட வந்தநல் ஊர்.

-நல்லைக்கந்தன் பாமாலை-

# வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க கிளைகளை திறக்குமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு பல.நோ.கூட்டுறவு சங்கத்தின் பல கிளைகள் மீள்குடியமர்ந்த பின்னர் இதுவரை திறக்கப்படாமையால் அப்பகுதி மக்கள் தாம் நிவாரணப் பொருட்களை நீண்டதூரம் சென்று பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நியமிக்கப்பட்ட நெறியாளர்கள் குழுவே தொடர்ந்தும் பல.நோ. கூட்டுறவு சங்கத்தை நடத்தி வருகின்றது.

வடமராட்சி கிழக்கு பகுதியில் மக்கள் முழுமையாக மீள் குடியமர்ந்துள்ள நிலையில் கிளைகளுக்கான பொதுச்சபைக் கூட்டமோ அல்லது புதிய நெறியாளர் சபை தெரிவுவோ எதுவும் இதுவரை இடம்பெறவில்லை என அப்பகுதி மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக பல.நோ. கூட்டுறவு சங்கக்கிளைகள் திறக்கப்பட வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (109)

## சென்.பீற்றர் ஆலயத்தின் கொடியேற்றத்திருவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு சென் பீற்றர் தேவாலயத்தின் வருடாந்த கொடியேற்றத்திருவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இந்தத்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் இறுதிநாள் திருவிழாவின் போது பிற்பகல் திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் மண்டைதீவுப் பகுதியைச்சேர்ந்த கத்தோலிக்க மக்கள் பெருமளவில் கலந்து கொள்வர் எனவும் தெரியவருகின்றது. (பா)

நல்லைக் கந்தனின் அருள் வேண்டிப் பிரார்த்திப்போம்
V.S.P நல்லெண்ணெய்
மருத்துவத் தேவைகளுக்கு உகந்தது
இல்லத்தரசிகளின் நம்பிக்கையும், நன்மதிப்பையும் வென்றது V.S.P லஞ் ஒயில்.
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
T.P 021 222 4135, 021 222 9165.
(C/1625)

# சமுர்த்தி நிவாரணம் இல்லை; பாதிக்கப்பட்ட மக்கள் கவலை


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைத் துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள செல்வபுரம் கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தாம் சமுர்த்தி நிவாரண முத்திரை கிடைக்காமல் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாக தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் மீள்குடியேறிய 350 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் இதனால் கஷ்டபட்டு வாழும் குடும்பங்கள் வெகுவாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேச மக்கள் வாழ்வாதார ரீதியாக நாளாந்தம் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வரும் நிலையில் சமுர்த்தி நிவாரணத்தையே நம்பி வாழ்வதாக தெரிவிக்கின்றனர். இந்நிலையில் சமுர்த்தி நிவாரண முத்திரை வசதியுள்ளவர்களுக்கு கிடைப்பதாகவும் ஏழைகள் அதில் விலக்களிக்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உணவுக்காக அன்றாடம் ஏங்கும் ஏழை மக்களுக்கு சமுர்த்தி நிவாரண முத்திரை கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து செயற்படவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)



சுன்னாகம் பொலிஸாரினால் கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற சிவில் பாதுகாப்பு தொடர்பான கூட்டத்தில் சுன்னாகம் பொலிஸ்நிலைய சிறுவர் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான கோதாகொட மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்குவதைக் காணலாம். (18)

# ஜெனரேற்றர் மூலம் எரிபொருள் விநியோகம்

## மக்கள் நன்மை

(முல்லைத்தீவு)

மானிப்பாய் பல.நோ.கூட்டுறவுசங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் மின்சாரம் தடைப்பட்ட வேளைகளில் ஜெனரேற்றர் மூலம் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மின்சாரம் இல்லாத வேளைகளில் எரிபொருளை பெறுவதற்கு மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்த நிலையில் குறிப்பாக வேறு இடங்களுக்குச் சென்று எரிபொருளை பெற்றுவந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனை அடுத்தே மக்கள் எரிபொருளை பெற்றுக் கொள்ளும் வகையில் மேற்படி சங்கத்தினால் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் பல பகுதிகளிலிருந்தும் வருகைதந்து நீண்ட வரிசையில் நின்று எரிபொருளை பெற்றுச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

## தெய்வீக இசையரங்கு

(நல்லூர்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று புதன்கிழமை எஸ். நித்தியானந்தனின் திருமுறைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின், திருமதி. வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம் பிரம்மஸ்ரீ என்.சிவசுந்தர சர்மா, கெஞ்சிரா ரி.சண்முகசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் பிரம்மச்சாரியம் அவசியம். ஏனெனில் உடல் மீதான ஆசை ஒழிந்தாலன்றி ஆத்மானந்தம் கிடையாது. - ஸ்ரீசாரதாதேவி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## மக்களுக்குச் செய்தது என்ன?

"அரசியல்வாதிகள் மக்களுக்கு என்ன செய்தார்கள் என்று இராணுவத்தினர் கேட்க முடியாது" என்று ஒரு புதிய வீரவசனத்தை உதிர்த்திருக்கிறார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர். இதைக்கேட்டு, சிங்கள இராணுவத்துக்கு நம்ம ஆள் குடுக்கிறார் பார் அடி என்று புல்லரிப்பவர்கள் இருப்பார்கள் என்பது அவருக்குத் தெரிந்திருக்கும். மக்களது தேவையெல்லாம் வீரப் பேச்சுக்கள் அல்லவா!

அரசியல்வாதிகள் மக்களுக்கு எதையும் செய்யாமலிருப்பது பற்றி இராணுவத்தினர் கேட்க முடியாது; பொலிஸ்காரர்கள் கேட்க முடியாது; எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்க முடியாது; வர்த்தகர்கள் கேட்க முடியாது; ஆசிரியர்கள் கேட்க முடியாது; அரசாங்கத்திடம் உதவி வாங்கிச் சீவிப்பவர்கள் கேட்க முடியாது; விவசாயிகள் கேட்க முடியாது; கடல்தொழிலாளர் கேட்க முடியாது; சிறுவர்கள் கேட்க முடியாது; வயது போனவர்கள் கேட்க முடியாது; முதிராத இளைஞர்கள் கேட்க முடியாது... இவர்களைத் தவிர்த்து அவர்கள் யாரையெல்லாம் மக்கள் என்கிறார்களோ அந்த மக்கள் மட்டுமே அதைக் கேட்கலாம்.

தமிழ் ரோசத்தைக் காப்பாற்றுவதற்காக அரசியல்வாதிகளாகி இருப்பவர்களிடம் போயும் போயும் சிங்கள இராணுவம் குறை கண்டுபிடிக்கலாமா? உணர்ச்சியுள்ள தமிழர்கள் இது கேட்டுக் கொதித்தெழ வேண்டாமா? இதற்கு மேலும் வீரம் கொப்பளிக்க, எங்களுக்காக வாக்குக் கேட்க வந்தாயா? புலம் பெயர்ந்து போய் உழைத்து டொலரோ பவுண்சோ அனுப்பினாயா? அல்லது காசு கட்டிச் சீட்டெடுத்து விருந்துண்ண நிதி தந்தாயா? எதற்குக் கேட்கிறாய் மக்கள் சேவை பற்றி? மாமனா மச்சானா... என்றெல்லாம் கழுத்து நரம்பு புடைக்க கத்திக் கேட்கலாம். தமிழர்களுக்குத் தெரியாத வீரமா?

மக்களுக்கு என்ன செய்தீர்கள் என்று கேட்டால் இவர்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது? யார் கேட்டால் என்ன, செய்த எல்லாவற்றையும் செய்துகொண்டிருப்பவற்றையும் அடுக்கடுக்காய் புட்டுப் புட்டு வைத்து அவர்கள் வாயை அடைக்க வேண்டியதுதானே? இந்தப் பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களும் அவற்றைக் கொஞ்சம் தெரிந்து கொண்டிருக்கலாமே!

முப்பதாண்டுகாலப் போரில் சொத்துக்கள் வளங்கள் எல்லாவற்றையும் இழந்து ஏதிலிகளாய் வாழ்வாதார உதவிகளுக்கு ஏங்கியிருக்கும் மக்களுக்கு இந்த மூன்றாண்டுகளாக நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டால், அதற்கு, சர்வதேச நாடுகள் இந்த அரசாங்கத்தைப் போர்க்குற்ற விசாரணை செய்து சிறையிலடைத்துவிட்டு, நாம் கேட்கிற மாதிரி ஒரு தீர்வுப் பொதியை நம்மிடம் தந்துவிட்டுப் போகட்டும், அதன்பிறகு பாருங்கள் பாலும் தேனுமாய் ஓட விடுவோம் என்று பதில் சொல்வதையே தங்களது அரசியல் பொறுப்பாய் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

தன்னிடமுள்ள குறைகளைப் பார்க்கத் தெரியாத சமூகம் தொடர்ந்தும் அதே பழைய தவறான பாதையிலேயே நடந்து கொண்டிருக்கும். இதற்கு உதாரண விளக்கமாகவே தமிழ் மக்களின் தலைமையாகத் தங்களைச் சொல்லிக்கொண்டு உலா வருகிற கூட்டமைப்பினரின் இன்றைய நடவடிக்கைகளும் இருக்கின்றன.

மக்களுக்காக எதையும் செய்யாமலிருக்கும் வங்குரோத்தை மறைக்கவே, ஒவ்வொரு நிகழ்வையும் அரச எதிர்ப்பு, மாற்று இனஎதிர்ப்பு என்ற சாயங்களில் தோய்த்தெடுத்து, உணர்ச்சிகர ஆவேசப் பேச்சுக்களால் மக்களைத் திசைதிருப்பி வருகிறார்கள்.

- ஆசிரியர்

## விவசாயத்தை மேம்படுத்தவே விவசாயிகளுக்கு மானிய உரம்

(தெல்லிப்பளை)

நாட்டின் விவாசாயத் துறையினை மேம்படுத்தும் நோக்கில் நீர்ப்பாசன முறையினைப்பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 350 ரூபாவிற்கு மானிய அடிப்படையில் உரத்தினை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக கமநல சேவைகள் மற்றும் வன ஜீவராசிகள் நலத்துறை அமைச்சர் எஸ்.சந்திரசேனா தெரிவித்துள்ளார்

கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளையில் நடைபெற்ற கமநல சேவை நிலையத் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஆட்சி செய்த எந்த ஒரு அரசாங்கமும் விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை மாறாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதையே பெரும்பாலான அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்தன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு நாட்டின் தேசிய உற்பத்திக்கும் அபிவிருத்திக்கும் விவசாயத்துறை பாரிய பங்களிப்பு செய்யும் என்பதை உணர்ந்து அதற்கேற்ற திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகின்றது என்றார். நெற் செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு அவர்களின் நலன் கருதி அரசு 350 ரூபாவிற்கு மானிய அடிப்படையில் உரத்தினை வழங்கியிருந்தது.

இதனால் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் நன்மையடைந்ததோடு தேவையானவற்றை நாம் எடுத்துக்கொண்டு ஏனையவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. போர் முடிந்த பின்னர் வடபகுதியின் வீதி அபிவிருத்தி, மின்சாரம், நீர்ப்பாசனம், விவசாயம் போன்ற துறைகள் வளர்ச்சி கண்டு வருகின்றன.

வடபகுதியில் வாழ்கின்ற விவசாயிகளின் நலன்களுக்காக 500 உழவு இயந்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளோம் இதன் மூலம் இங்குள்ள குளங்கள்,கேணிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது இலங்கையில் இருந்து நூற்றுக்கு 15 வீதமான சோளன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது இதனை விரிவுபடுத்தும் நோக்கில் வடபகுதியில் 5000 ஏக்கர் நிலப்பரப்பில் சோளம் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் 10000 மெற்றிக்தொன் சோளத்தினை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியும் என்று நம்புவதாக தெரிவித்தார்.

தற்போது நாட்டில் அமைதி ஏற்பட்டு நாடு அபிவிருத்திப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் சிலர் பிரிவினைவாதத்தையும் இனவாதத்தையும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள் இவர்களின் இந்தப் பேச்சுக்களுக்கு மக்கள் எடுபட்டுப்போகக்கூடாது. இந்த அரசு மக்களுக்கு நல்லசேவையை ஆற்றி வருகின்ற இந்த நிலையில் இந்த அரசு நான்கு வருடங்களும் ஜனாதிபதி ஆறுவருடகளும் ஆட்சி செய்வார்கள் இந்த அரசை எவராலும் அசைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (02)

## மீள்குடியேற்றுமாறு ஜனாதிபதிக்கு மகஜர்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகப் பிரதேசத்தில் இராணுவ உயர் பாதுகாப்பு வலய பிரகடனத்தினையடுத்து தமது சொந்த வீடுகளிலிருந்து வெளியேறி இடம் பெயர்ந்த மக்கள் தங்களை மீண்டும் தமது சொந்த வீடுகளில் மீளக்குடியேறி வாழ நடவடிக்கை எடுத்துத் தமக்கு விமோசனம் வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

அம் மகஜரில் மேலும் கோரப்பட்டுள்ளதாவது, நாங்கள் பருத்தித்துறை துறைமுகப் பிரதேசத்தில் ஜே/401 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் வசித்து வந்தோம். நாட்டில் யுத்த அனர்த்தங்கள் இடம்பெற்றமையால் 1996 ஆம் ஆண்டு உயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டபோது நாங்கள் எங்கள் சொந்த வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதனால் எங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்தோம். இன்றுவரை அவ்வாறான வாழ்க்கையே வாழ்ந்து வருகின்றோம். நாங்களும் எங்கள் பிள்ளைகளும் பல வருடங்களாக சொல்லொணாக் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகின்றோம்.

நாட்டில் தற்போது அமைதியும், சமாதானமும் நிலவி வருகின்றது. யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த மக்கள் அரசாங்கத்தினால் மீளக் குடியேற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கு அரசாங்கத்தின் பல்வேறு உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

நாங்களும் எங்கள் சொந்த வீடுகளில் மீளக் குடியேறி மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் வாழ விரும்புகிறோம். எங்கள் பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளைப் போல் கல்வி கற்று வாழ்க்கையை வளம்படுத்த வேண்டும் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டின் ஜனாதிபதியாகிய நீங்கள் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டு பெருங் கஷ்டங்களையும், துயரங்களையும் அனுபவித்து வரும் எங்களுக்கு விமோசனம் வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் பிரதம மந்திரி, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (01)

## பெறுபேறு வெளியீடு

கலைமாணி பகுதி II 2008 வெளிவாரி பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வெளியாகியுள்ளது. எனவே இன்று முதல் மாணவர்கள் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளை பார்வையிடலாம் என வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் க.சிவராசா தெரிவித்துள்ளார். (54)

## பெண் நோயியல் கிளினிக் சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பெண் நோயியல் கிளினிக் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படவுள்ளது. கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை இக் கிளினிக்கில் கர்ப்பப்பை புற்றுநோய், கர்ப்பப்பை வாசல் புற்றுநோய், ஆகியவற்றுக்கான ஆலோசனைகளும், சிகிச்சைகளும் பெண் வைத்திய நிபுணர்களால் வழங்கப்பட்டுள்ளது.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை 8.00 மணிமுதல் நண்பகல் வரை நடைபெறவுள்ள இக் கிளினிக் சேவை சாவகச்சேரி ஆதார வைததியசாலையின் கிளினிக் அறையில் நடைபெறும் எனவும் குறித்த நோய்களுக்கான அலோசனைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலை வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (11)

## தொடர்கிறது சட்டத்தரணிகளின் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்.நீதிமன்றங்களில் சட்டத்தரணிகளின் பகிஷ்கரிப்பு நேற்று தொடர்ந்து நடைபெற்றது.

வழமை போல் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் நேற்று ஆரம்பித்த போதும் சட்டத்தரணிகள் எவரும் சமூகமளிக்கவில்லை. இதேவேளை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் பல்வேறு வகையான வழக்குகள் சிலவற்றைப் பதிவு செய்தனர்.

போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கப்பட்டமை, சூழலிற்கு பங்கம் விளைவித்தமை, போன்ற வழக்குகள் இவற்றில் அடங்கியிருந்தன. (பா)

- காசிநாதன்

# ரப்பர் ஸ்டாம்ப் அல்ல!




**இந்தியாவின்** 13ஆவது ஜனாதிபதியாக இன்று 25ஆம் திகதி பதவியேற்கிறார் பிரணாப் முகர்ஜி. அவர் முன் பல சவால்கள் உள்ளன. வருகின்ற 2014 நாடாளு மன்றத் தேர்தலில் காங்கிரஸ், பா.ஜ.க. ஆகிய இரு முக்கிய தேசிய கட்சிகளுமே மிகக்குறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையே பெறும் என்ற கருத்துக்கள் இப் போதே முன்னிலை வகிக்கின்றன. காங்கிரஸ் கட்சியின் சார்பில் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்த விரும்புகிறது. அதற்கான தடையை நீக்கி விடவே, பிரணாப் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டார் எனச் சொல்லப்படுகிறது. பிரணாப் வெற்றி பெற்றதும் அவரை வாழ்த்தப் போன சோனியா காந்தி - ராகுல் காந்தியுடன் சென்றது இங்கே குறிப்பிடத்தக்கது. மத்தியில் கூட்டணி ஆட்சிதான் என்ற நிலைப்பாடு ஏறக்குறைய 23 வருடங்களாக நிலைத்து விட்டது. இன்னும் அதுதான் நிலைமை என்றே தெரிகிறது. ஆகவே எதிர்வரும் தேர்தலுக்குப் பிறகு ஜனாதிபதியின் முக்கிய அதிகாரமான ஷபிரதமரை ஆட்சியமைக்க அழைக்கும் உரிமை;யை பிரயோகப்படுத்துவதில் சவாலை சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் பிரணாப் முகர்ஜி இருக்கிறார்.

ராஷ்டிரபதி பவனில் நிலுவையில் உள்ள தூக்குத்தண்டனை கைதிகளின் கருணை மனுக்கள் இன்னொரு சவாலாக இருக்கும். ஏனென்றால், இதுவரையிருந்த டாக்டர் அப்துல்கலாமும் சரி, பிரதீபா பாட்டிலும் சரி அந்த மனுக்கள் மீது முடிவு எடுக்காமலேயே விடைபெற்று விட்டார்கள். இப்போது அவை பிரணாப் முகர்ஜியின் முன்பு வைக்கப்படும். அவற்றில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் மனுக்களும், தீவிரவாதி அப்சல் குருவின் மனுவும் இருக் கிறது.

பிரதமர் மன்மோகன் சிங் ஏற்கனவே ஒருமுறை நிதியமைச்சராக பிரணாப் முகர்ஜி இருந்த போது அவரிடம் பணியாற்றியவர். ஆகவே பிரதீபா பட்டேலுக்கும், பிரதமர்மன்மோகன் சிங் கிற்கும் இடையே இருந்த சீரான உறவு பிரணாப் முகர்ஜியிடம் இருக்குமா என்ற கேள்விக்குறி பல இடங்களிலும் எழுந்துள்ளது. அரசின் முக்கிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது, கருணை மனுக்கள் மீது முடிவு எடுப்பது, பிரதமரை நியமனம் செய்வது, மாநில அரசுகளை கலைப்பது போன்ற குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்தான் அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் இடையே நெருடலை உருவாக்கும் விடயங்கள். புதிய குடியரசுத் தலைவராகப் போகும் பிரணாப் முகர்ஜி, வெறும் ஷரப்பர் ஸ்டாம்பு; குடியரசுத் தலைவராக இருப்பதற்கான வாய்ப்புகள் மிகமிகக் குறைவு என்பதே அரசியல் பார்வையாளர்களின் எதிர்பார்ப்பு. அதற்கு ஏற்றாற்போல், ஷஎன் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவேன்; என்று பிரதமர்கள் கூறுவது போலவே, ஜனாதிபதியாக வெற்றி பெற்றதும் பிரணாப் முகர்ஜி அறிவித்திருக்கிறார் என்பது மிகவும் உன்னிப்பாக கவனிக்கத்தக்கது.


பிரணாப் மீது அன்னா ஹசாரே குழுவைச் சேர்ந்த அர்விந்த் கெஜ்ரிவால் சில குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கிறார். ஏழை ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்புவதாகச் சொல்லி இருபது இலட்சம் தொன் அரிசி வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் 2500 கோடி ரூபா ஊழல் நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக, இந்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, கமல்நாத் ஆகியோர் மீது விசாரணை நடத்தவேண்டும் என்று கானா அரசு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டது. ஆனால் அந்த விஷயத்தைப் பற்றி மத்திய அரசு மூச்சே விடவில்லை என்பது கெஜ்ரிவால் சொல்லும் முதல் குற்றச்சாட்டு. 2005 ஆம் ஆண்டில் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சராக பிரணாப் முகர்ஜி இருந்தபோது இந்தியா – பிரான்ஸ் இடையே சுமார் பத்தொன்பதாயிரம் கோடி ரூபா மதிப்பிலான ஸ்கார்பின் நீர்மூழ்கிக் கப்பல் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது.

அப்போது நான்கு சதவிகித கமிஷன் பெறப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால் அதுபற்றி மத்திய அரசு எவ்வித விசாரணையையும் நடத்தவில்லை என்பது கெஜ்ரிவால் சொல்லும் இரண்டாவது குற்றச்சாட்டு.

# செல்லாத எம்.பி.க்கள்!

**பிரணாப்** முகர்ஜி ஒருவழியாக ஜனாதிபதியாகிவிட்டார். ஜனாதிபதி பதவிக்குத் தேர்தல் என்ற ஒன்று நடப்பதே தெரியாத சமாச்சாரமாக இருந்த நிலையை இம்முறை மாற்றிவிட்டார் பிரணாப்ஜி. ரப்பர் ஸ்டாம்ப் பதவி என்ற பெயரைப் பெற்றிருந்தாலும், அப்துல் கலாம் காலத்தில் பள்ளிகளுக்கு விசிட் அடிப்பது, கனவு, எதிர்காலம், 2020 வல்லரசு போன்ற தொடர் 'வேர்ட் ஆ.:.ப் மவுத்' சங்கதிகளால் அப்பதவிக்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்தினார். ஆனால், அந்தக்கால பாலச்சந்தர் பட லேடீஸ் கிளப் கண்ணாடி போட்ட ஆண்ட்டிகள் கேரக்டர்களுக்கு ஒப்ப நடந்துகொண்டு அப்பதவியை மீண்டும் அதன் பிம்பத்திற்கே தள்ளிய பெருமை பிரதீபா பாட்டிலையே சாரும். இவர் என்ன செய்கிறார் என்று பார்ப்போம். எதைச் செய்கிறாரோ இல்லையோ, பத்துப் பதினைந்து முறை இலங்கைச் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் என்று நம்புவோம். இந்தத் தேர்தலில் நமக்குக் கிடைத்த செய்தி : நம்மிடம் 15 செல்லாத எம். பி.க்கள் இருக்கிறார்கள், அதிகாரப்பூர்வமாக.

- நர்சிம்



- ஆர். முத்துக்குமார்

# பிரணாப் முகர்ஜி : ஏணிகளும் பாம்புகளும்

**அரசியல்** ஒரு பரமபத விளையாட்டு. நீங்கள் எதிர்பார்க்கும் சமயங்களில் ஏணிகள் கிடைத்துவிடாது. ஆனால் எதிர்பாராத தருணத்தில் பாம்புக்கடிகள் சாத்தியம். தன்னுடைய நாற்பதாண்டு கால அரசியல் வாழ்க்கையில் பலமுறை இரண்டையும் பிரணாப் முகர்ஜி சந்தித்திருக் கிறார். முதல் முறையாக இப்போது பெரியதோர் ஏணி கிடைத்திருக்கிறது. அறுபது சதவிகிதத்துக்கும் அதிகமான வாக்குகளைப்பெற்று ஜனாதிபதியாக அவர் பொறுப்பேற்கிறார். இந்நிலையில், பிரணாப் முகர்ஜி கடந்து வந்த அரசியல் பாதையைச் சுருக்கமாக ஆராய்வது பொருத்தமாக இருக்கும்.

மேற்குவங்க மாநிலம் மிராடி கிராமத்தில் 11 டிசம்பர் 1935 அன்று பிறந்தவர் பிரணாப் குமார் முகர்ஜி. பிராமணவகுப்பைச் சேர்ந்தவர். தந்தை கமதாகின்கார் முகர்ஜி பழம்பெரும் காங்கிரஸ்காரர். மேற்குவங்க சட்ட மேலவை உறுப்பினராக இருந்தவர். தந்தையைப் போலவே மகன் பிரணாப் புக்கும் அர சியலில் ஆர்வம். அரசியல், வரலாறு, சட்டம் ஆகிய துறைகளில் பட்டம் பெற்றார்.

அரசு அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணியைத் தொடங்கி, கல்லூரி ஆசிரியராக மாறி, ஒரு கட்டத்தில் பத்திரிகைத் துறையிலும் ஆர்வத்தைச் செலுத்தினார் பிரணாப். தாயகத்தின் அழைப்பு என்ற பத்திரிகையில் இணைந்தபோது அவருடைய அரசியல் ஆர்வம் அடுத்த கட்டத்தை அடைந்தது. குடும்ப வழியில், காங்கிரஸில் இணைந்தார். கட்சிப்பணிகளில் அவர் காட்டிய சுறுசுறுப்பு தலைவர்களின் கவனத்தைக் கவர்ந்தது. முக்கியமாக, அவரது கல்விப் பின்புலம். அதன் பலனாக 1969இல் மேற்குவங்கத்தில் இருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் பிரணாப்.

எதையும் புள்ளிவிவரத்துடன் விவாதிக்கும் திறன் கொண்டிருந்த பிரணாப்பின் செயல்பாடுகளைக்கவனித் துவைத்திருந்த இந்திரா காந்தி, 1973இல் அவருக்கு ஓர் இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தார். தொழில் வளர்ச்சித்துறை துணை அமைச்சர் பொறுப்பு பிரணாபுக்கு வழங்கப்பட்டது. பிறகு கப்பல் மற்றும் தரைவழிப் போக்கு வரத்துத்துறை துணை அமைச்சரானார்.

இந்நிலையில் இந்திரா காந்திக்கும் நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியத்துக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் முளைத்தன. சி.எஸ்ஸின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையில் வருமான வரி, ஆயத்தீர்வை, தொழில் வளர்ச்சி வங்கி, கடன் கொள்கை ஆகிய துறைகளைத் தனியாகப் பிரித்தார் இந்திரா. பிரணாப் முகர்ஜியை நிதித்துறை இணை அமைச்சராக நியமித்து, அவர் வசம் சில துறைகளை ஒப்படைத்தார்.

ஜனதா கட்சியைத் தோற்கடித்து மீண்டும் இந்திரா காந்தி ஆட்சியைப் பிடித்தபோது பிரணாப் முகர்ஜி நிதித் துறை அமைச்சர் ஆனார். இந்திராவுக்கு அடுத்த இடம். இந்நிலையில் திடீரென இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட, நம்பிக்கையும் விசுவாசமும் நிரம்பிய பிரணாப்தான் அடுத்த பிரதமர் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் ராஜீவ் காந்தி பிரதமரானார்.

1984 தேர்தலில் வெற்றிபெற்று ராஜீவ் மீண்டும் பிரதமர் ஆனபோது பிரணாப் முகர்ஜிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. மூத்த தலைவரான அவருக்கு அமைச்சரவையில் இடமில்லை. இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட பிறகு பிரணாப் பிரதமராக விரும்பினார் என்றும் அதற்காகக் கட்சி எம்.பிக்களிடம் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினார் என்றும் ராஜீவ் காந்திக்குச் சொல்லப்பட்டதாலேயே அவர் புறக்கணிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

1986 நவம்பரில் புதிய கட்சியைத் தொடங்கினார் பிரணாப். ராஜீவுக்கு எதிராகப் புரட்சி நடத்தியதன் காரணமாகவே தான் வெளியேற்றப்பட்டதாகச் சொன்ன பிரணாப், காங்கிரஸுக்கு எதிராகப் புரட்சி செய்த சுபாஷ் சந்திரபோஸ் பெயரையும் தன்னை ஆளாக்கிய இந்திராவின் பெயரையும் இணைத்து, இந்திய தேசிய கட்சி (சுபாஷ் - இந்திரா) என்று பெயரிட்டார். தனது ஆதரவாளர்களுடன் பேசிய பிறகு கட்சியின் பெயரை ராஷ்ட்ரிய சமாஜ்வாதி காங்கிரஸ் என்று மாற்றிக் கொண்டார்.

பலத்த எதிர் பார்ப்புடன் கட்சி தொடங்கிய போதும் ராஜீவ் காந்திக்கு எதிராகக் கட்சி நடத்த முடிய வில்லை. தேர்தலில் பங்கேற்ற போதும் தோல்வியே மிஞ்சியது. பிறகு ஜி.கே. மூப்பனார் எடுத்த சமாதான முயற்சிகளின் பலனாக ராஜீவ் காந்தியுடன் சமரச மாகி காங்கிரஸில் கலந்தார் பிரணாப். ஆனால், இந்திரா காலத்தில் தரப்பட்ட முக்கி யத்துவம் அதற்குப் பிறகு கிடைக்கவில்லை.

அரசியல் தொடர்பு எல்லையில் இருந்து வெகுதொலைவுக்குப் போயிருந்த பிரணாப் முகர்ஜியை மீண்டும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர் 1991இல் பிரதமரான பி.வி. நரசிம்மராவ். புத்திக் கூர்மையுடன் நிர்வாகத் திறனையும் ஒருங்கே பெற்றிருந்த பிரணாப் பின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார் நரசிம்மராவ். விரைவில் அமைச்சரவையில் இணைந்தார் பிரணாப்.

2004 ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற் போக்குக் கூட்டணி ஆட்சி அமைக்கும் வாய்ப்பு அமைந்தது. பிரதமர் பதவியை ஏற்பதற்கு சோனியா மறுத்து விட்டதைத் தொடர்ந்து பிரணாப் பிரதமர் ஆவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக ஊடகங்களில் செய்திகள் கசிந்தன. ஆனால், மன்மோகன் சிங் பிரதமர் பதவியை ஏற்றார்.

ஆனால், பிரணாப்பின். திறமையை நன்குஉணர்ந்தசோனியா காந்தியும் மன்மோகன் சிங்கும் அவரைபாதுகாப்புத்துறைஅமைச்சராக நியமித்ததோடு, அவை முன்னவர் என்றகௌரவம்நிறைந்த பதவியைக் கொடுத்தனர். கட்சி, ஆட்சி, கூட்டணி விடயங்களில் சிக்கல் நேரும் சமயங்களில் எல்லாம் அவற்றைத் தீர்க்கும் பொறுப்பை பிரணாப்பிடமே ஒப்படைத்தனர்.

கச்சிதமாகக் காய் நகர்த்தக்கூடிய ஒருவர் ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்திருப்பது அவசியம். அதற்கு பிரணாப் முகர்ஜி பொருத்தமானவர் என்பது காங்கிரஸின் நம்பிக்கை.

# மலையகத்தில் கோதுமை பயன்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் வாழுகின்ற மக்கள் மத்தியில் கோதுமை மா பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கு தொழிற்சங்க அரசியல் பிரமுகர்கள் மக்களைத் தெளிவுபடுத்த வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் ஜி.பி.குமாரஸ்ரீ தலைமையில் நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் நுவரெலியா மாவட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள, உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் அரச நிறுவனங்களின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில், நுவரெலியா மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களை விட கோதுமை மா பாவனை அதிகரிப்பினைக் கட்டுப்படுத்தி அரிசி உணவுப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு மக்களைத் தெளிவுபடுத்த தொழிற்சங்க அரசியல் பிரதிநிதிகள் முன்வர வேண்டும்.

அத்துடன் மக்களின் பயன்பாடு அதிகமாக உள்ள பாதைகளை உரிய நிறுவனங்கள் பொறுப்பெடுத்துச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்திக்க மத்திய மாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தோட்டப் பகுதிகளில் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் தோட்ட நிறுவனங்கள் அக்கறை செலுத்த வேண்டும். நுவரெலியா பொதுவைத்தியசாலையைத் தரமுயர்த்தும் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும.

நுவரெலியா மாவட்டதில் முன்னைய அமைசசர்கள் முன்னெடுத்தத் திட்டங்கள் உரிய வகையில் நிறைவு செய்ய வேணடும். தோட்டப் பகுதிகளில் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டத்தினால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்களானால் இவ்விடயம் குறித்து தோட்ட நிர்வாகம், பொலிஸ், பிரதேச சபைகள், தோட்ட மக்கள் ஒன்றிணைந்து கலந்தாலோசித்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களால் ஏற்படுத்தப்படுவதால் இவ்விடயம் குறித்து சகலரும் உரிய அவதானம் செலுத்த வேண்டும். நுவரெலியா மாநகர சபை, ஹட்டன் - டிக்கோயா நகரசபை, நுவரெலியா பிரதேச சபை ஆகிய சபைகளினால் சேகரிக்கப்படுகின்ற குப்பைகூளங்களைச் சேகரித்து வைப்பதற்கான உரிய நிலங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு சுற்றாடல் பிரிவினர நடவடிக்கை எடுக்க வேணடும் என்றாா.

## காய்ச்சலுடன் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பவேண்டாம்



(கொழும்பு)

காய்ச்சல் உள்ள நிலையில் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பாமல் இருப்பது மிகவும் சிறந்ததாகும்.

டெங்கு நோயினால் உயிரிழந்த சிறுவர்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்ற போது அவர்களில் பலர் காய்ச்சல் இருக்கும் போது பாடசாலை சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருக்கும் போது சிறுவர்கள் பாடசாலைக்குச் சென்று களைப்படைந்ததால் நோய்த் தாக்கம் அதிகரித்து விபரீதங்கள் ஏற்பட முடியும் என டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ரஞ்சித் படுவன்துடாவ தெரிவித்துள்ளார்.

## பல்கலை மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு


(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பாக தேவையெனில் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உயர் நீதிமன்றம் வழக்கை செப்டெம்பர் 12 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சார்பாக தோன்றிய வழக்குரைஞர் தனது கட்சிக்காரருக்கு தன்மீது ஏன் நீதிமன்ற அவமதிப்புக்கான நடவடிககைகளை தொடங்கக் கூடாதென்பதற்கு விளக்கம் அளிக்க முடியுமென நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு தனது நிலைப்பாட்டை விளக்கும் ஒரு சத்தியக்கடதாசியை தாக்கல் செய்ய ஒரு மாத கால அவகாசம் நீதிமன்றம் வழங்கியது.

மேலும் நீதிமன்ற தீர்ப்புக்கமைய தாமதமின்றி இசட் புள்ளியை வெளியிட நடவடிக்கை எடுக்கத் தவறியதில் நீதிமன்றத்தை அவமதித்ததாக அவர் மீது ஏன் நீதிமன்ற நடவடிக்கையை தொடங்கக் கூடாதென விளக்கும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்தல் விடுத்திருந்தது.



2011 ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்கான புதிய இசட் புள்ளி பெறுபேறுகள் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டன. இந்த புதிய பட்டியலினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இது தொடர்பில் முறையிடுவதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு முன்னால் குழுமியி ருந்தனர்.

## இசட் புள்ளி பெறுபேறு தொடர்பில் திருப்தி அடைய முடியாது



இசட் புள்ளி பெறுபேறு தொடர்பில் திருப்தி அடைய முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கஷடப் பிரதேச மாணவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் வேண்டி நீதிமன்றின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும் தயங்க மாட்டேன்.

இசட் புள்ளி பெறுபேறுகள் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேச மாணவ மாணவியருக்கு நன்மையை ஏற்படுத்தியுள்ளது. எனினும், தூரப் பிரதேச மாணவ, மாணவியர் பாதிப்புககளை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுகக வேணடும். இசட் புள்ளி பெறுபேற்றில் மாற்றம் ஏற்பட்ட மாணவ, மாண வியரை ஐந்து நாட்களுக் குள் மீண்டும் உயர்தரப் பரீட்சைக்குத தோற்று மாறு அதிகாரிகள் கோரி யுள்ளனர்.

மன உளைச்சலுடன் எவ்வாறு மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் இவ்வாறு உத்தரவிடும் அதிகாரிகள் உயர்தரப் பரீட்சைக்கு எவ்வாறு தோற்றினார்கள் என்பதனை மறந்து விட்டார்கள் என நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

## குடும்பநல பரிசோதகர்கள் சேவைப் புறக்கணிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் சேவையாற்றும் குடும்ப நல சுகாதார அதிகாரிகள் சேவைப் புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இந்த தகவலை அரச குடும்ப நல சுகாதார அதிகாரிகள் சங்க பிரதி செயலாளர் தேவிகா கொடிதுவக்கு வெளியிட்டுள்ளார்.

ஊசிமருந்துகளை வழங்கும் நடவடிக்கையில் இருந்து விலகிக் கொள்ளவிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உத்தியோகப்பூர்வ சீருடை வழங்கப்படாமை உளளிட்ட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இந்த சேவைப் பகிஸ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

## தகுதி பெற்ற அனைத்து மாணவர்களும் பல்கலை செல்ல அனுமதிக்கப்படவேண்டும்

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் செலல அனுமதி அளிக்கப்படவேண்டும் என சோஷலிச மாணவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இருமுறை வெளியிடப்பட்டுள்ள இசெட் புள்ளியால் பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்துள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உ/த பரீட்சையில் தோற்றுவதற்கு இந்த மாணவர்களால் தயாராக முடியாது என சோஷலிச மாணவர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் முதல் தடவை பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களும் திருத்தம் செய்யப்பட்டு 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட இசட் புள்ளியின்படி பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கபபட வேண்டும் என அந்த சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## போலி நகை அடகுவைத்து மூவர் பண மோசடி

(கொழும்பு)

ஹட்டன் நகரில் போலி நகைகளை அடகு வைத்து பணம் பெற்ற இரு பெணகளையும் ஒரு ஆணையும் ஹட்டன் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

தங்க முலாம் பூசப்படடு, தொழில் நுட்பத்தாலும் கண்டு பிடிக்க முடியாத போலி நகைகளை நகை அடகு பிடிக்கும் இடங்களில் அடகு வைப்பதன் மூலம் பல இலட்சம் ரூபா பணத்தை இவர்கள் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை போலியான தங்க நகைகளை வைத்து சுமார 80 ஆயிரம் ரூபாவை பெற முயற்சித்த போது நகைக் கடை உரிமையாளர கொடுத்த தகவலுக்கு அமைய இவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்செயலில் இவர்கள் நீண்டகாலமாக ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் ஏற்கனவே ஹட்டன் பிரதேசத்தில் நான்கு நகை அடகு பிடிக்கும் இடங்களில் போலியான நகைகளுக்கு சுமார் 12 இலட்சம் ரூபாவை பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட பெண்களில் ஒருவர் கொழும்பு மருதானை பிரதேசத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றியமை உட்பட 43 குற்றங்கள் தொடர்பில் வழக்குகளை எதிர்நோக்கி வருபவராவர்.

## குடும்பஸ்தர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடியில் விமானப் படையினரின் வாகனம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு சுமார் 8.30 மணியளவில் கல்லடி, சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாகவுளள U வளைவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

அம்பாறையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற விமானப் படையினரின் வாகனம் துவிச்சக்கரவண்டியிலிருந்து இறங்கி வீதியை கடக்க முனைந்த பாதசாரி மீது மோதியுள்ளது.

இந்த சம்பவத்தில் நொச்சிமுனையைச் சேர்நத குடும்பஸ்தரான பாலசிங்கம் ஜெகநாதன் என்பவரே உயிரிழந்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் குறித்த வாகனத்தை செலுத்தி வந்த விமானப் படையை சேர்ந்த கோப்ரல் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் வாகனமும் காத்தான்குடி பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான விசாரணையை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தூரநோக்குத் திட்டங்களே
# வளமான எதிர்காலத்திற்கு வழி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் அமைச்சர் பசில்ராஜபக்ஷவுடன் இணைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்கள் மூலம் எமது மழலைகளுக்கு வளமான ஓர் எதிர்காலம் அமைத்துக் கொடுக்கப்படும். என நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளருமான அ.இரவீந்திரன் தெரிவித்தார்.

கொக்குவில் மேற்கு சனசமூகநிலைய சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி மழலைகளின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டியில் சிறப்பு அதிதியாகப் பங்கு கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சனசமூகநிலைய தலைவர் டாக்டர் லயன் வி.வேதநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தீர்க்கதரிசனமான செயற்பாடுகள் மூலம் எமது சந்ததியாகிய மழலைகளின் ஒளிமயமான எதிர்காலம் நிச்சயப்படுத்தப் பட்டுள்ளது. அபிவிருத்தியானது குறிப்பிட்ட ஒரு இடத்தில் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் பரவலாக்கப்பட்டுள்ளது. எமது நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அமைச்சரவர்களின் அயராத முயற்சி காரணமாக அரியாலை கிழக்கு நாவலடி மணியந்தோட்டம் உதயபுரம் ஆகிய இடங்களில் மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் எனத்தெரிவித்தார்.



இந்நிகழ்வில் மெய்வல்லுனர் போட்டிகள் மூலம் மழலைகள் தமது சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தியதுடன் நல்லூர் பிரதேச சபைத்தலைவர் பி.வசந்தகுமார், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் சிவானந்தன் நகுலன் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் உள்ளிட்ட பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் ஒதுங்கிய படகு அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு வேதாரண்யம் கடற்கரையோரமாக கடந்த 7 ஆம் திகதி கரையொதுங்கிய இலங்கைப்படகு வடமராட்சி - பருத்தித்துறை மீனவர் ஒருவரது என அடையாளம் காணப்பட்டிருப்பதாக யாழ்.கடற்தொழில் நீரியல் வழத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப்படகு சட்டவிரோத கடத்தல் நடவடிக்கைக்குட்பட்டதா என்பது குறித்து படகின் உரிமையாளர் கடற்படையினரால் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

குறித்த படகு சம்பவதினம் அந்த கடற்தொழிலாளியினால் மாதகல் கடற்கரைப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தூண்டில் வலையை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்குத் திரும்புகையில் அவர் மது அருந்தியிருந்ததன் காரணமாக அவர் கடலில் தவறி விழுந்தார். அதனால் படகு காற்றினால் தமிழ் நாட்டின் குறித்த பகுதிக்கு அடித்துச் செல்லப்பட்டதாக தெரியவருகின்றது.

இந்நிலையில் இந்திய மீனவர்துறை அமைச்சின் அதிகாரிகள் குறித்த படகு கரையொதுங்கியிருப்பதனை கடற்தொழில் நீரியல் வளத்துறைப் பணிப்பாளருக்கு அறிவித்திருந்தனர்.

இந்நிலையிலேயே இவ்விடயம் குறித்து குறித்த கடற்தொழிலாளர் கடற்படையினரினால் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

தற்சமயம் குறித்த படகு தமிழ் நாடு வேத55ாரண்யம் பகுதி யில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(பா)

## முரசின் இன்றைய பலன்

(25.07.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 10 ஆம் திகதி. ஸப்தமி பின்னிரவு 2.36 வரை. நட்சத்திரம் அத்தம். முற்பகல் 10.21 வரை. சித்தயோகம். கரிநாள். ஸப்தமி, அட்டமி. பின்னிரவு 2.36 இன் மேல்.

இராகுகாலம் 12.02 - 1.32 வரை. சுபநேரம் 4.32 - 6.02 வரை.

எமகண்டம் 7.32 -9.02 வரை. குளிகன் காலம் 10.32 - 12.02 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குடும்ப சுகம், நம்பநட நம்பி நடவாதே, பயணம் தவிர்க்கவும், மருத்துவ செலவுகள். |
| ரிஷபம் | சுப செய்தி, மனதில் மகிழ்ச்சி, பகைமை காட்டியோர் நட்புக்கரம் நீட்டுவார், கடன் தீரும். |
| மிதுனம் | வெற்றிகள், புதிய முயற்சிகள், அடிக்கடி பயணம், தொழில் வியாபாரத்தில் இலாபம். |
| கடகம் | புகழ் வந்து சேரும், தேவையற்ற அலைச்சல், பயணங்களைத் தவிர்க்கவும், கவனம் தேவை. |
| சிம்மம் | நட்புக்கள் கிடைக்கும், கண்ணியம் காப்பீர், மண வாழ்க்கை அமையும், தாராள பணவரவு. |
| கன்னி | புத்திமேன்மை, கடன் தொல்லை தீரும், தொழிலில் இலாபம் கிட்டும், இலட்சியம் நிறைவேறும். |
| துலாம் | கல்வியால் செலவு, அவசரம் கூடாது, சகோதரரால் சொத்துப் பிரச்சினை, கருத்து வேறுபாடு. |
| விருச்சிகம் | கவனம் தேவை, ஸ்திரிகளால் நன்மை, அதிகாரிகளிடம் கவனம், பணப்பயிரால் இலாபம். |
| தனுசு | மனதில் அமைதி, பொறுப்புக்களைத் தவிர்க்கவும், இடமாற்ற அதிருப்தி, வெற்றி கிட்டும். |
| மகரம் | தெய்வ வழிபாடு, விவசாயத்தில் இலாபம், குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| கும்பம் | முன்தினம் போல் சந்திராட்டமம், குடும்பச் சிறப்பு, பணவரவுகள், தடை தாமதம் அகலும். |
| மீனம் | சந்திராட்டமம் உதவாத நாள், கவலைகள் அதிகரிப்பு, உறவினர் உதவி, கோபம் தவிர். |

## விசேட செயற்பாடு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் வாகன உடமை மாற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறித்த நாளில் இச்செயற்பாடுகளை பொதுமக்கள் மேற்கொள்ள முடியும் எனவும் அன்றைய தினம் வாகன உரிமைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

## ரமழான் சிந்தனை




**ரமழான் மாதத்தில் நோய் அல்லது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட எந்தக் காரணமுமின்றி ரமழானுடைய ஒரு நாள் நோன்பை விட்டு விடுகிறாரோ அவர் ரமழான் அல்லாத காலத்தில் ஆயுள் முழுவதும் நோன்பிருந்தாலும் அதற்குப் பரிகாரமாக ஆக முடியாது என ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.**

**நூல் - அஹ்மத் - திர்மிதி**

(105)

## பரமர் சங்கமம்



"அடிக்கு மேல அடி அடித்தால் அம்மியும் நகரும்" எண்டு சொல்லுவினம்.

சட்டம், ஒழுங்கை நிலை நாட்டவும் எந்த நேரமும் "கண்ணில எண்ணை ஊத்தின மாதிரி" விழித்துப் பாத்து நடவடிக்கை எடுத்தாத்தான் சமுதாயப் பிறழ்வுகளை ஒருவழிப் படுத்தவும் முடியும்.

பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் தம்பலகாமம் பகுதியில் சமீபத்தில் அடித்துக் கொலை செய்யப்பட்டாரெண்ட செய்தியள் பரவியதைக் கேள்விப்பட்டிருப்பியள்.

டெங்கு நோய் பரப்பும் நுளம்பு ஒழிப்புத் தொடர்பான களப்பணியில் ஈடுபட்டிருந்த வேளையே அவ்விதம் அடித்துக் கொலை செய்யப்பட்டதாகவும் அறிய முடிகிறது

நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மையை விளைவிக்கும் பணியில் ஈடுபட்டதற்காகவே அவர் கொல்லப்பட நேர்ந்தது. சட்ட விரோதச் செயல்களான கள்ளச் சாராயம்விற்றல், போதைப் பொருட்கள் விநியோகித்தல் ஆகியவற்றை ஒழித்துக் கட்ட முனைவோரும், முன்பாக இவ்விதம் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து வெளியிடப்பட்டிருந்த ஒரு அறிக்கையில் இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விதமான சம்பவங்கள் நாட்டின் எந்த மூலையிலும் நடைபெற்று முடிந்த பின்னால் அத்தகைய நிகழ்வுகள் இனிமேலும் நடைபெற அரசு அனுமதிக்கக் கூடாதென கூக்குரல் கோரிக்கையள் விடப்படுவது ஒன்றும் புதுமையில்லை.

நம் நாட்டின் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் தமிழர்களுக்கும், சிறுபான்மை இனங்களுக்கும் பாதகமான செயற்பாடுகள் அரங்கேறியுள்ளன. இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட சுகாதாரப் பரிசோதகர் முஸ்லிம் சமூகத்தவர்.

எதுவொரு அசம்பாவிதம் நடந்தேறிவிட்டால் இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிக்கைகளும், பிலாக்கணங்களும் தோன்றுவது நடைமுறையில் இருந்து வருவதைப் பரவலாகக் காணமுடிகின்றது.

ஏன் அதனை இல்லாமல் ஒழித்துக் கட்ட முடியவில்லை.

இப்பொழுது புதிதாக செய்தி ஒன்று தெரிய வந்துள்ளது. தேசிய நுளம்பு ஒழிப்புத் திட்டத்தில் பங்கெடுக்கும் பரிசோதகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேட பாதுகாப்புச் செயற்றிட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்களின் தூக்கத்தால் தான் மக்கள் சட்டத்தை தமது வசம் எடுத்துக் கொள்ள நேர்கிறது. அதுவுமல்லாமல் கடந்த காலங்களில் மக்கள் சட்டத்தைக் கைகளில் எடுத்துக் கொண்டபோது பாத்துக் கொண்டு சிவனே என்றிருந்த ஆட்சிப்பீடங்களையும் கண்டிருக்கிறோம்.

இனிமேலும் அத்தகைய சட்ட விரோத - அடாவடி செயற்பாடுகள் நம்மிடையே தோன்றாமல் இருக்க சட்டம், ஒழுங்கு, நீதி என்னும் அரச அலகுகள் "அடிக்கு மேல அடி" என்பது போல் சட்டத்தைக் கையிலெடுத்தால் தான் முடியும் இல்லையே சொல்லுங்க பாப்பம்....

## ஒலிம்பிக்கிலும் மேன்முறையீடு

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக்கின் ஹொக்கிப் போட்டியில் மேல் முறையீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட் போட்டியில் ஆடுகள நடுவரின் முடிவில் சந்தேகம் ஏற்பட்டால் அதனை எதிர்த்து போட்டியில் ஆடும்அணிகள் மேல்முறையீடு செய்யலாம். அதனை 3ஆவது நடுவர் தொழில்நுட்ப உதவியுடன் ஆய்வு செய்து முடிவை அறிவிப்பார். இதேபோல் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் ஹொக்கி ஆட்டத்தில் ஆடுகள நடுவர்கள் தவறாக தீர்ப்பு வழங்கினால் அதனை எதிர்த்து விளையாடும் அணிகள் மேல்முறையீடு செய்யலாம். வீடியோ பதிவை பார்த்து போட்டிநடுவர்முடிவை அறிவிப்பார். இரு அணிகளும் தலா ஒருமுறை மேல்முறையீடு செய்யலாம். செய்யப்படும் முறையீடு சாதகமாக அமையும் அணி மீண்டும் முறையீடு செய்ய முடியும். பாதகமாக அமைந்தால் மீண்டும் முறையீடு செய்ய முடியாது. பனால்டி ஸ்டிரோக், பனால்டி கார்னர், கோல் எல்லைக்கு வெளியில் இருந்து அடிக்கப்படும் பந்துகள் ஆகியவை உள்ள சந்தேகங்களுக்கு மட்டுமே முறையீடு செய்ய முடியும்.

## நினைத்துக்கூடப் பார்க்காத வாய்ப்பு

(லண்டன்)

ஒலிம்பிக் போட்டியில் தொடர்ந்து 5 முறை விளையாடுவேன் என்று நினைத்து கூட பார்த்ததில்லை என்று இந்திய ரென்னிஸ் நட்சத்திரம் மகேஷ் பூபதி தெரிவித்தார்.

ரென்னிஸ் ஆடத் தொடங்கிய சமயத்தில், தொடர்ச்சியாக 5 ஒலிம்பிக் போட்டிகளில் களமிறங்குவேன் என நினைத்துக் கூட பார்த்ததில்லை. இது எனக்கு மிகவும் பெருமையான விடயம். ரென்னிஸ் வாழ்க்கையும் எதிர்பாராத அளவுக்கு வெற்றிகரமாக அமைந்தது.

லண்டன் ஒலிம்பிக் போட்டியும் முக்கியமான மைல்கல்லாக அமையும் என நம்புகிறேன். ஆண்கள் இரட்டையர் பிரிவில் போட்டி கடுமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நானும் போபண்ணாவும் சிறப்பாக விளையாடி பதக்கம் வெல்ல முயற்சிப்போம். நான்கு போட்டியில் வென்றால் பதக்கத்தை உறுதி செய்யலாம். அதைப் பற்றி கவலைப்படாமல், ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறுவதில் மட்டும் கவனம் செலுத்துவோம்.

கிராண்ட் ஸ்லாம் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் வரும். ஆனால், ஒலிம்பிக் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே கிடைக்கும் அரிய வாய்ப்பு. இம்முறை பதக்கம் வெல்ல வேண்டும் என்ற உறுதியுடன் களமிறங்குகிறோம். நாட்டுக்காக விளையாடுவது எப்போதுமே தனிச்சிறப்பு வாய்ந்தது. அதனால்தான், எல்லா வீரர்களுமே ஒலிம்பிக் போட்டிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். லண்டனில் தடகள சாம்பியன் உசேன் போல்ட்டை சந்திக்க ஆர்வமாக இருக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## மௌன அஞ்சலி

(லண்டன்)

ஜேர்மனியில் உள்ள முனிச் நகரில் 1972ஆம் ஆண்டில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் போது பாலஸ்தீன தீவிரவாதிகள் 8 பேர் திடீரென புகுந்து இஸ்ரேல் வீரர்-வீராங்கனைகள் உள்ளிட்ட 11 பேரை கடத்திச் சென்று பணய கைதிகளாக வைத்து சுட்டுக் கொன்றனர். மரணம் அடைந்த இஸ்ரேல் வீரர்களை கௌரவிக்கும் வகையில் லண்டன் ஒலிம்பிக் கிராமத்தில் நேற்று முன்தினம் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் ஜேக்ஸ் ரோஜே தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## ஒலிம்பிக் ஏற்பாடுகள் திருப்தி

(லண்டன்)

ஒலிம்பிக் ஏற்பாடுகள் மிகவும் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஒலிம்பிக் சம்மேளனத் தலைவர் ஜாக்கியூஸ் தெரிவித்துள்ளதாக லண்டன் மேயர் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

லண்டன் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. போட்டி தொடங்குவதற்கான நாள் நெருங்கி வருவதால் இங்கிலாந்து மக்களிடையே ஆர் வம் அதிகரித்து வருகிறது. தொடக்க விழா நடை பெறும் கிழக்கு லண்டன் ஸ்ட்ராட் போர்ட் ஒலிம்பிக் பார்க் ஸ்டேடியம் உட்பட அனைத்து மைதானங்களிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வீரர்கள் வந்து செல்ல சிறப்பான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பார்வையாளர்களோ, வீரர்களோ அச்சப்படத் தேவையில்லை.

சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத் தலைவர் ஜாக்கியூஸ் ரோக்கி லண்டனில் தங்கியுள்ளார். ஒலிம்பிக் போட்டி வரலாற்றிலேயே லண்டனில்தான் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் திருப்தி தெரிவித்துள்ளார்.

## எல்லா கண்களும் உசைன்போல்ட்டை நோக்கி...

(லண்டன்)

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டம் 100 மீற்றர் தொடர் ஓட்டம் ஆகியவற்றில் தங்கப்பதக்கம் வென்று அனைவரின் கவனத்தையும் தன்பக்கம் திருப்பிய ஜமைக்காவை சேர்ந்த ஓட்டப்பந்தய வீரர் இந்த ஒலிம்பிக்கில் எப்படி அசத்த போகிறார் என்பதை பார்க்க உலகம் முழுவதும் பெரும் ரசிகர்கள் கூட்டமே காத்து கிடக்கிறது. எல்லோருடைய கண்களும் உசைன்போல்ட்டின் கால்கள் படைக்கும் சாகசத்தை பார்க்க ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறது. அதேநேரத்தில் ஒலிம்பிக் போட்டிக்கான தேர்வு பந்தயத்தில் உசைன்போல்ட் சக நாட்டு வீரர் யோஹன் பிளாக்கிடம் தோல்வி கண்டதால் குதிரை வேக பாய்ச்சல் ஓட்டம் உசைன் போல்ட்டிடம் இருந்து மறுபடியும் வெளிப்படுமா? என்ற சந்தேகமும் கிளம்பி இருக்கிறது.தசைப்பிடிப்பால் அவதிப்பட்டு வரும் உசைன்போல்ட் மொனாக்கோவில் நடைபெற்ற டயமன்ட் லீக் தடகள போட்டியில் இருந்து கடைசி நேரத்தில் விலகி விட்டார். ஜெர்மனி சென்று விளையாட்டு டாக்டர் ஹன்ஸ் முல்லரிடம் சிகிச்சை பெற்றுள்ளார். அடுத்த வாரத்தில் பயிற்சியை தொடங்க இருக்கும் அவர் ஒலிம்பிக்குக்கு தயாராகி விடுவார் என்று அவரது பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.




## டெஸ்ட் அணியிலும் கெய்ல்

(ஆன்டிகுவா)

நியூசிலாந்து அணியுடனான முதல் டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணியில் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் சேர்க்கப்பட்டுள்ளார். மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, கடந்த ஒன்றரை ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டு வந்த கிறிஸ் கெய்ல் நீண்ட இடைவெளிக்கு பிறகு ருவென்ரி-20 மற்றும் ஒருநாள் தொடருக்கான அணியில் சமீபத்தில் இடம் பிடித்தார். இதைத் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளுக்கான அணியிலும் அவர் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

காயம் காரணமாக ஓய்வில் இருந்த அனுபவ வீரர் சந்தர்போலும் அணிக்கு திரும்பியுள்ளார். மொத்தம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், முதல் போட்டி ஆன்டிகுவா, சர் விவியன் ரிச்சர்ட்ஸ் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

அணி விபரம்: டரன் சமி (கப்டன்), கிறிஸ் கெய்ல், அட்ரியன் பரத், கெய்ரன் பாவெல், ஆசாத் புடாடின், ஷிவ்நரைன் சந்தர்போல், மார்லன் சாமுவேல்ஸ், நரசிங் தியோநரைன், தினேஷ் ராம்டின் (விக்கெட் கீப்பர்), டினோ பெஸ்ட், கெமார் ரோச், ரவி ராம்பால், சுனில் நரைன்.

## கிண்ணம் வென்ற ரோடிக்

(லாஸ்ஏஞ்சல்ஸ்)


அட்லான்டா ஓப்பன் ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் உலகின் 4ஆம்நிலை வீரர்ஆன்டி ரேடிக் (அமெரிக்கா), லக்சம்பேர்க் வீரர் ஜிலெச் முல்லெரை சந்தித்தார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஆன்டி ரோட்டிக் 1-6, 7-6 (7-2), 6-2 என்ற செட் கணக்கில் ஜிலெச் முல்லெரை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். இந்தஆண்டில் ரோட்டிக் வென்ற 2ஆவது பட்டம் இதுவாகும். ஒலிம்பிக்கில் முடிந்த வரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன் என ரோடிக் தெரிவித்தார்

## ஓவலில் இங்கிலாந்துக்கு மரண அடி

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இனிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்க, இங்கிலாந்து அணிகள்ககிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது.



இதில் 4 விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 240 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஓர் இனிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. போட்டி ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே ரவி போப்பாராவை இழந்த இங்கிலாந்து, பின்னர் மற் பிரயர், இயன் பெல்லின் இணைப்பாட்டத்தால் போட்டியை வெற்றி தோல்வியற்ற நிலையில் முடித்துக் கொள்ளும்நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டது. எனினும் மற் பிரயரின் ஆட்டமிழப்பின் பின்னர் அவ்வணி விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக இயன் பெல் 55 ஓட்டங்களையும், மற் பிரயர் 40 ஓட்டங்களையும், அன்ட்ரூ ஸ்ட்ரோஸ் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டேல் ஸ்ரெய்ன் 5 விக் கெட்டுக்களையும், இம்ரான் தாஹிர் 3 விக் கெட்டுக்களையும், மோர்னி மோக்கல், வேர்னன் பிலாந்தர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 385 ஓட்டங்களையும், தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 637 ஓட்டங்களைப் பெற்றுத் தனது இனிங்ஸையும் இடைநிறுத்திக்கொண்டது. போட்டியின் நாயகனாகதென்னாபிரிக்க அணி சார்பாக முச்சதம் பெற்ற ஹசிம் அம்லா தெரிவானார்.

அத்துடன் லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் முதன்முறையாக தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது. முன்னதாக இங்கு 13 முறை டெஸ்டில் விளையாடிய தென்னாபிரிக்க அணி 7 போட்டியை (1907, 24, 29, 35, 47, 60, 65) சமநிலை செய்தது. இங்கிலாந்து அணி 6 போட்டியில் (1912, 51, 55, 94, 2003, 08) வெற்றி பெற்றது.

## எஸ்.எல்.பி.எஸ். கண்ணியத்துடன் இடம்பெறும்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற ஏற்பாடாகியுள்ள எஸ்.எல்.பி.எல். போட்டிகள் கண்ணியத்துடன் இடம்பெறும் என இலங்கைக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. எஸ்.எல்.பி.எல். போட்டிகள் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஒழுக்க விதிகளுக்கு அமைவாகவே இடம்பெறும் எனத் தெரிவித்துள்ள இலங்கைக் கிரிக்கெட் சபை, இத்தொடரின் ஒழுக்க விதிகள் இறுக்கமாகப் பேணப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

சரியான முறையில் எஸ்.எல்.பி.எல். 'போட்டிகளுக்குரிய ஏல நிகழ்வு இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக இலங்கைக் கிரிக்கெட் சபை புதிய வகையான வெளிப்படையான ஏலத்தை ஏற்பாடு செய்திருந்ததாகத் தெரிவிக்கும் இலங்கைக் கிரிக்கெட் சபை, சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொரு அணியும் அதிகபட்ச பெறுமதியைப் பெற்றுக்கொள்வதை இலங்கைக் கிரிக்கெட் சபை உறுதி செய்ததாகத் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா பிறீமியர் லீக் தொடரின் அணிகள், அவற்றின் நிலை குறித்து ஊடகங்களால் கேள்விகள் எழுப்பப்பட்டதையடுத்தே இலங்கைக் கிரிக்கெட் சபை இதைத் தெரிவித்துள்ளது. அணிகளுக்குரிய ஒப்பந்தத்தின்படி அணியோ, அணியைச் சேர்ந்தவர்களோ சூதாட்டத்திலோ அல்லது அது சம்பந்தமான நடவடிக்கைகளிலோ ஈடுபட முடியாது என்பதோடு, அணியை விலைக்கு வாங்குவதற்கு அவர்கள் குறித்தளவு பணத்தைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதன்முறையாக இடம்பெறவுள்ள ருவென்ரி-20 தொடரான சிறிலங்கா பிறீமியர் லீக் அடுத்த மாதம் 10ஆம் திகதி ஆரம்பித்து 21 நாட்கள் இடம்பெறவுள்ளது. இதில் இலங்கையின் 7 மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏழு அணி கள் பங்கு கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த கட்டம் குறித்து கவனம் தேவை

உலகின் முதற்தர அணியாக வருவதற்குரிய ஒரு தடையைத் தாண்டியுள்ள நிலையில் அடுத்த கட்டம் குறித்துத் தென்னாபிரிக்க அணி தனது முழுமையான கவனத்தைச் செலுத்துவதாக தென்னாபிரிக்க அணியின் பயிற்றுவிப்பாளர் கரி கேர்ஸ்டன் தெரிவித்துள்ளார். உலகின் முதற்தர அணியாகத் தொடர்ந்து நீடிப்பதற்கு ஏராளமான கடின வேலைகள் செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், அவற்றில் தென்னாபிரிக்க அணி தனது கவனத்தைச் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். உலகின் முதற்தர அணியைத் தீர்மானிக்கும் தொடராக இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடரின் முதற்போட்டியில் ஓர் இனிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றுக் கொண்ட நிலையில் அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.





# மாகாண கால்பந்து மன்னார் சம்பியன்

## போராடித் தோற்றது கிளிநொச்சி



(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட கால்பந்தாட்டத் தொடரில் மன்னார் மாவட்ட அணி சம்பியனானது. வடமாகாண விளையாட்டு திணைக்களம் நடாத்திய மாவட்ட அணிகளுக்கிடையிலான மாகாண மட்ட கால்பந்தாட்டத் தொடர் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெற்றது.

ஆண், பெண் என இரு பிரிவினருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்ட அணிகளும் பங்கு கொண்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்ட அணியும், மன்னார் மாவட்டஅணியும் தகுதிபெற்றன. வடபகுதியில் கால்பந்தில் அசைக்க முடியாத மாவட்டமாக மன்னார் திகழ்கின்றமையால் இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியைஇலகுவில் தோற்கடிக்கும் என்ற எதிர்பார்ப்பு கால்பந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் முனுமுனுக்கப்பட்டது. இருப்பினும் முதல் முறையாக மாகாண மட்ட இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றதென்ற சிறப்பைக் கொண்டிருந்த கிளிநொச்சி மாவட்ட அணி முயன்றால் முடியும் என்ற உத்வேகத்துடன் களம் புகுந்தது.

ஆட்டம் ஆரம்பமாகி இரு அணிகளும் கோல்போடும் முனைப்பில் ஈடுபட்டனர். முற்பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களின் கோல் போடும் முயற்சி தோல்வியிலேயே முடிவடைந்தது. பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாக இரு அணி வீரர்களும் தமது ஆட்சேரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். போட்டியில் எந்த அணி பலம், எந்த அணி பலவீனம் என்பதை கணிக்க முடியாத அளவிற்கு இரு அணி வீரர்களின் ஆட்டம் இருந்தது. அத்துடன் போட்டியைக் காண வந்த ரசிகர்களை பேரானந்த்தைக் கொடுக்கும் வகையில் இப்போட்டி அமைந்தது. இறுதியில் ஆட்டம் நிறைவடைய மூன்று நிமிடங்கள் இருக்கையில் மன்னார் மாவட்ட அணி எதிர்பாராத விதமான ஒரு கோலை அடித்தனர். இதன் பின்னர் வீறுகொண்ட கிளிநொச்சி மாவட்ட அணியால் கோல் போடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாகாண சம்பியனாக மன்னார் மாவட்ட அணி தெரிவானது. யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் நடைபெற்ற போட்டிகளில் சிறந்த ஆட்டமாக இது அமைந்திருந்தது என கால்பந்து ரசிகர்கள் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. (93, 20)




## சென். ஜோன்ஸ் பெருவெற்றி

(யாழ்ப்பாணம்)

பெரியபுலம் மகாவித்தியாலய அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி 229 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டம் ஒன்று கடந்த 14ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 47.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 329 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரிசங்கர் 73, மிதர்சன் 23, கனமிர்தன் 48, கௌரங்கன் 62, ஏ. அனோஜன் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுதர்சன் மூன்று, பிரசாந்த் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 330 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பெரியபுலம் மகா வித்தியாலய அணி 17.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100

ஓட்டங்களைப் பெற்று படுதோல்வி அடைந்தது. இதில் சுதர்சன் 45 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சிந்துஜன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (எஸ்.பி)

# ஆவரங்கால் இந்து சம்பியன்

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 47ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதின.

ஐந்து செட்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் முதலிரு செட்களையும் கைப்பற்றிய ஆவரங்கால் மத்தி முன்னிலை வகித்தது. மூன்றாவது செட்களையும் கைப்பற்றி ஆவரங்கால் மத்தி அணி கிண்ணத்தை வெல்லும் என அதன் இரசிகர்களால் பெரும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் பின்னடைவிலிருந்து வீறுகொண்ட ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, தமது ஆட்ட யுக்தியை மாற்றியமைத்து பதிலடி கொடுத்தது. மூன்றாவது, நான்காவது என அடுத்தடுத்து இரு செட்களையும் கைப்பற்றி போட்டியை சமப்படுத்தியது.

வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி செட்டில் இரு அணிகளும் தமது முழுப் பலத்தையும் திரட்டி ஆட்டத்தில் ஈடுபட்டனர். இறுதியில் ஐந்தாவது செட்டையும் கைப்பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணியைச் சேர்ந்த ஜெனன் தெரிவானார். இப்போட்டி கரப்பந்தாட்ட இரசிகர்களைப் பெரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (118)





ஆனைக்கோட்டை ஐக்கிய, சனசமூக நிலையம் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா கடந்த 21ஆம் திகதி முன்பள்ளித் தலைவர் ஜேன்சிங்கம் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் வண்ணமயமான பல விளையாட்டு நிகழ்வுகள் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது. ஆரம்ப நிகழ்வில் பாண்ட் வாத்தியக் குழுவினர் அணிவகுத்து செல்வதைக் காணலாம்.(எஸ்.பி)

# யாழ். இந்து அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)

மகாஜனாக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி அபாரமான வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டம் ஒன்று கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது. யாழ் இந்துக் கல்லூரி அணி மகாஜனா கல்லூரி அணியை எதிர்த்து விளையாடியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன் அடிப்படையில் யாழ். இந்துக் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜானந் ஐந்து சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 58 பந்துகளில் 83 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் திருவேள் 37, ஜனவத்ச சர்மா - 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துயிலக்ஸன் 3, டினேஸ், பிரகாஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 273 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய மகாஜனா கல்லூரி அணி 26..5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் மாத்திரம் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் செந்தூரன் 49, சரன்ராஜ் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராகுலன் 4, வழுதி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (93)

அனுபவம் மிக்க தமிழ்நாட்டு அரசியல்வாதியான மு.கருணாநிதி, 1980 களில் இலங்கையில் தனியான ஒரு தமிழ் தேசத்துக்கான ஆதரவை பறைசாற்றும் முகமாக தான் உருவாக்கிய தமிழ் ஈழ ஆதரவாளர்கள் அமைப்புக்கு (டெசோ) புத்துயிர் ஊட்டப்போவதாக அறிவித்துள்ளார்.

# இலங்கைத் தமிழர்களின் இக்கட்டான நிலையை பரிகாசம் செய்கிறது டெசோ!

- The Hindu-வில்
கே. வெங்கட்ராமன் கட்டுரையிலிருந்து.

> **தமிழ்நாட்டிலுள்ள கட்சிகளுக்கு தமிழ் ஈழம் என்பது கூட்டம் சேர்க்கும் ஒரு ஆயுதமாக உள்ளதுடன் எதிர்க் கட்சியினருக்கும் மற்றும் போட்டிக்கு அடையாளமான அரசியலில் ஆளும் கட்சியினருக்கும் அதைவிட இன்னும் கடுமையான நிலைப்பாட்டை எடுப்பதற்கு தூண்டுதல் அளிக்கும் ஆயுதமாகவும் உள்ளது.**


1986 இல் அது பரந்த அளவிலான ஒரு அரசியல் மேடையாக இருந்தது டன் இந்தியாவின் வேறுவேறு பாகங்களிலுமுள்ள தலைவர்களையும் தன்பக்கம் ஈர்த்தது, மேலும் அதற்கு பரந்த அளவிலான ஆதரவும் கிட்டியிருந்தது. கால் நூற்றாண்டுகள் கடந்த பின்னர், அதிகம் கவனத்தை ஈர்க்கும் அம்சமாக அதற்கு புத்துயிர் ஊட்டும் முயற்சி, தற்போதைய அரசியல் பின்னணியில் அதன் தொடர்ச்சியாக அமையாத ஒன்றாகவே உள்ளது.

**ஞாநியின்**
**இந்த வார சந்தேகம்:**

எப்படியும் தனி ஈழம் கேட்டு தீர்மானம் போடப் போவது இல்லை என்று கலைஞர் கருணாநிதி அறிவித்துவிட்ட நிலையில் ஏன் இன்னும் டெசோ மாநாட்டில் சிறப்புரையாற்ற அவர் ராஜபக்ஷவுக்கு அழைப்பு அனுப்பாமல் இருக்கிறார்?

இந்தியாவாலோ அல்லது பெரும் பகுதியான உலகத்தினராலோ இலங்கையை பிளவுபடுத்துவதில் ஆர்வம் இல்லாதபடியால் தமிழ் ஈழத் திட்டம் உண்மையில் ஒருபோதும் நிறைவேறாத ஒன்றாகவே இருந்தது.

அந்த விடயத்துக்கு ஆதரவாக இருந்த ஒரே போட்டியாளர்களை அழித்த பின்னர், மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களின் சக்தியால் அதன் அரசியல் உள்ளடக்கம் குறைத்துக் காண்பிக்கப்பட்டதால், பிரிவினைக்கு ஆதரவான அந்த இயக்கத்தை திறமையாக அழித்து விட்டதன் மூலம் பிரிவினைவாதம் அதன் இறுதி தோல்வியை அடைந்துள்ளது. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவரது தமிழ் சமூகத்தின் பாழடைந்த மற்றும் அழிவுக்கான மரபின் காரணகர்த்தாவாக உள்ளதுடன், உயிர் பிழைத்துள்ள சில மிதவாத அரசியல் தலைவர்கள் கிட்டத்தட்ட கைவிடப்பட்ட அதிகாரப் பகிர்வுக்கான பிரசங்கத்தின் துகள்களை கையிலெடுத்துக் கொண்டு தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுமிடங்களில் மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியை நோக்கி பணியாற்றும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.




தமிழ்நாட்டிலுள்ள கட்சிகளுக்கு தமிழ் ஈழம் என்பது கூட்டம் சேர்க்கும் ஒரு ஆயுதமாக உள்ளதுடன் எதிர்க் கட்சியினருக்கும் மற்றும் போட்டிக்கு அடையாளமான அரசியலில் ஆளும் கட்சியினருக்கும் அதைவிட இன்னும் கடுமையான நிலைப்பாட்டை எடுப்பதற்கு தூண்டுதல் அளிக்கும் ஆயுதமாகவும் உள்ளது.

கருணாநிதி கடந்த பல வருடங்களாக இலங்கையின் பிரிவினைக்காக வாதாடுபவராகவும் மற்றும் தமிழ் குழுக்கள் கட்சிகளிடம் ஒரு தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு செல்லும்படி ஆலோசனை வழங்குபவராகவும் இருபுறமும் ஊசலாடிய வண்ணமே இருந்துள்ளார். அவரது ஆகப் பிந்தைய தலைகீழ் திருப்பமாக உள்ளது, டெசோவின் பிரதான கொள்கையான தமிழீழக் கருவை அவர் புத்துயிரளிக்க இருக்கும் அமைப்பின் முதலாவது மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கியதுதான். “தமிழீழம் எனது கனவாக உள்ளது, ஆனால் அதை மேலும் வலியுறுத்துவதற்கோ அல்லது எதிர்ப்புகளை ஏற்பாடு செய்வதற்கோ ஏற்ற தருணம் இதுவல்ல” என அவர் தனது பக்கத்தை நியாயப்படுத்தினார்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ஆரம்பத்தில் தமிழ் சிறுபான்மையினருக்கு சாதகமாக இருப்பது போலத்தான் தோன்றியது, பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987இல் ஏற்பட்ட சமயம் நாட்டின் ஐக்கியத்துக்கும் மற்றும் தமிழர்களின் அபிலாசைகளுக்கு ஏற்றதாக மாகாண சுயாட்சி முறை என்கிற இரண்டையும் பாதுகாக்கும் வழியாக ஒரு நடுநிலைத் தன்மை கொடுக்கப்பட்டது, மிகச் சமீபமான காலங்களில் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாப்பது மிக விருப்புடைய நோக்கமாக மாறியுள்ளது.

டெசோவானது, இலங்கையிலுள்ள தமிழர்களின் இக்கட்டான நிலையை பரிகாசம் செய்வது போல உள்ளது. உண்மையில் அவர்கள் பிரிவினைக் கோரிக்கைக்கு உயிர் கொடுப்பதைக் காட்டிலும் தங்கள் பாதுகாப்பையும் மற்றும் உயிர் பிழைத்தலையும் பற்றியே அதிக அக்கறை கொள்வார்கள். உண்மையில் எல்.ரீ.ரீ.ஈ யினை தோற்கடிப்பதற்கு வெகு காலத்துக்கு முன்பே தமிழ் ஈழம் என்பது ஒரு சாத்தியமான திட்டம் அல்ல என்பதை சகல மட்டங்களிலும் உணரப்பட்டிருந்தது.

வெளிநாட்டில் மேற்கொள்ளப்படும் பிரிவினைவாத சொல்லாட்சி எதுவும் இப்போது இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். சிங்கள தேசியவாதம் தற்சமயம் வரலாறு காணாத உச்ச நிலையில் உள்ளது, மற்றும் சர்வதேசத்தின் மிகப் பெரிய நம்பிக்கையாக பிரபாகரன் இப்போது காட்சியிலிருந்து விலக்கப்பட்டுவிட்டார். தீவினை பிளவு படுத்தும் முயற்சிக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடும் உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படும் ஒரு கொள்கையாக உள்ளது.

---

# ஆரோக்கியமாக வாழ்வோம்!

(ஜெயந்தி-சிகரம்)

நாம் தற்போது வாழ்ந்து வரும் அவசர உலகத்திற்கேற்ப எங்களுடைய பழக்க வழக்கங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அதேபோல் நாம் உண்ணும் உணவுகளிலும் மாற்றங்கள் காணப்படுகின்றன.



யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய உணவுப்பழக்கங்கள் காணாமற் போய்விட்டதாகப் பலரும் கவலை தெரிவிக்கின்றனர். இந்தக் கவலை நியாயமானது தான். ஏனெனில் காணாமற்போகும் உணவுகளால் எங்களுடைய ஆரோக்கியமும் பாதுகாக்கப்படாமல் போய்விட்டது என்பதே உண்மை.

எங்களுடைய மூதாதையர்கள் வாழ்ந்த காலப்பகுதியில் கிடைத்த பல உணவுகள் தற்போது இருந்த இடம் தெரியாமற் போய் விட்டது. இன்று வாழும் சிறுவர்களுக்கு நவீனகால ஃபாஸ்ட் ஃபுட் உணவுகளையே பெற்றோர்கள் கண்ணில் காட்டுகின்றார்கள்.

தம்முடைய குழந்தைகள் மற்றவர்களை விட கல்வியில் சிறந்தவர்களாக வரவேண்டும் என நினைக்கும் பெற்றோர்கள், அவர்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது குறைவு. அத்துடன், பொருளாதாரக் கஷ்டமும் குடும்பத்தில் உள்ள கணவன், மனைவி இருவரையும் வேலைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளிவிடுகின்றது.

பிறகென்ன, வீட்டில் உதவிக்கென நிற்பவர்களின் பொறுப்பிலேயே குழந்தைகள் வளர்கிறார்கள் அல்லது காப்பகத்தில் வளர்கின்றார்கள். அலுவலகத்தில் முதுகு ஒடிய வேலை செய்துவிட்டு வரும் பெற்றோரால் வீட்டு வேலைகளிலோ குழந்தைகளின் ஆரோக்கியத்திலோ கவனம் செலுத்த முடிவதில்லை.

அதற்காக, முன்னர் எந்தப் பெண்களும் வெளியில் சென்று தொழில் செய்யவில்லை என்பதும் இல்லை. முன்பு கூட்டுக் குடும்பங்களாகவே வாழ்ந்தார்கள். குழந்தைகளைப் பார்ப்பதற்கு வீட்டில் முதியவர்கள் இருப்பார்கள்.



தற்போதைய பொருளாதாரம் அதற்கெல்லாம் இடம் கொடுக்காத காரணத்தினால், பெரும்பாலானோர் தங்களுடைய ஆரோக்கியத்தை தொலைத்ததுடன் குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் தொலைக்கிறார்கள்.

“பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கானது போல” எனப் பெரியவர்கள் கூறுவது இந்தக் கால மனிதர்களுக்ககு மிகவும் பொருத்தமானதாகத் தான் இருக்கின்றது.

அதற்காக வேலைக்குப் போவது தவறு, எல்லோரும் வீட்டில் இருங்கள் என்பதில்லை. எங்கே நீங்கள் சென்றாலும் உங்களுடைய ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள் என்பதுதான்.

ஆரோக்கியமாய் வாழ என்ன வழி? நாம் ஆரோக்கியமற்றவர்களாக வாழ்வதற்கு உணவுப்பழக்கங்கள் மட்டுமே காரணம் அல்ல. முந்திய காலங்களில் கடைகளில் அரிசியை வாங்குபவர்கள் மிகக் குறைவு. ஒவ்வொரு வீட்டிலும் நெல்லை வாங்கி குற்றி அரிசியாக்குவார்கள். நெல்லை அரிசியாக்குவதற்கு கல் உரல் இருக்கும். கல் உரலில் நெல்லைக்குற்றி உமியை நீக்கிய பின்னர் மரத்திலான உரலில் அரிசியின் தவிட்டினை மெதுவாகக் குற்றி நீக்குவார்கள்.

இது செலவைக் குறைப்பதுடன், உடம்புக்கு நல்லதொரு உடற்பயிற்சியாகவும், ஆரோக்கியம் நிறைந்த உணவினையும் தந்தது என்கின்றனர் மூத்தோர். அத்துடன், சம்பல் அரைப்பதற்கு அம்மி, உழுந்து அரைப்பதற்கு ஆட்டுக்கல் போன்றனவும் இருந்தன. தொழில்நுட்ப சாதனங்களின் பெருக்கத்தால் இவை எல்லாமே காணாமற் போய்விட்டன.

இன்று கிரைண்டர், மிக்ஸிகளுடன் வாழ்பவர்கள் தங்களது உடல் ஆரோக்கியத்திற்காக நல்ல உணவுகளைத் தெரிந்து உண்பதுடன், உடற்பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதிகளவிலான தூக்கமும் உடல் எடையை அதிகரிக்கச் செய்யும். எனவே மிதமான தூக்கம், அளவான உணவு, தேவையான நடைப்பயிற்சி என்பவற்றின் ஊடாக எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம்.



# மணக்க மணக்க பேசுங்கள்!

ஒருநாளைக்கு சுமார் 20 பேரையாவது அலுவலகத்திலோ, வெளியிலோ சந்திக்கிறோம். நாம் வெளி நபர்களைச் சந்திக்கும்போது ரிப் - ரொப்பாக ஆடை அணிய வேண்டாம் என்றாலும், குறைந்தபட்சம் மற்றவர் முகம் சுளிக்காத அளவிற்காவது ஆடை அணிவோம். ஆடைக்கு எப்படி முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதே போன்று நம்முடைய வாய்க்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நம் வாயிலிருந்து துர்நாற்றம் வீசினால் நம் எதிரே நின்று பேசுவதற்கே மற்றவர்கள் விரும்பமாட்டார்கள். மேலும் நம் சுகாதாரம் குறித்து பிறரிடம் கேலி பேசுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. வாய் துர்நாற்றத்திலிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?

வாய் துர்நாற்றத்திற்கு பொதுவான காரணங்கள் மோசமான வாய் சுகாதாரம், புகைப்பிடித்தல், மது அருந்துதல், நீர்சத்து குறைவாக இருத்தல் ஆகியவையே. ஒரு சிலருக்கு தீராத குடல் நோய் மற்றும் புண் காரணமாக இருக்கும். ஈறுகளில் பிரச்சினை, நீரிழிவு நோயும் கூட இதற்குக் காரணமாக இருக்கிறது. அசைவ உணவுத் துணுக்குகள் வாயில் தங்கினால் கேட்கவே வேண்டாம் வாய் துர்நாற்றம் உறுதி.

துர்நாற்றத்தை உண்டாக்கும் பற்றீரியாக்கள் வாயில் உற்பத்தியாவதைத் தடுக்க வேண்டும். இதற்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை பல்விளக்க வேண்டும். தேனீர் குடித்து முடித்தால் கூட வாய் கொப்பளிப்பது நல்லது. குறைந்தது 6 மாதத்துக்கு ஒருமுறையாவது பல் மருத்துவரை அணுக வேண்டும்.

வாய் சுகாதாரம்: "நான் தினமும் பல்விளக்குகிறேன். உயர்தர, விலை உயர்ந்த பற்பசை, பிரஷ்ஷைத்தான் உபயோகிக்கிறேன். ஆனாலும், ஏன் வாய் துர்நாற்றம் வீசுகிறது" என்று நீங்கள் எண்ணக்கூடும். நீங்கள் உபயோகிக்கும் பொருள்களினால் பலன் இல்லை, அதனை எவ்வாறு உபயோகிக்கிறீர்களோ அதுதான் பலனளிக்கும். துலக்கும்போது கடமைக்காக இரண்டு தேய் தேய்த்துவிட்டு போகக்கூடாது. குறைந்தது 2 நிமிடங்களாவது பல் துலக்கும் பிரஷ் வாயில் இருக்க வேண்டும். வாயில் தங்கியிருக்கும் துணுக்குகளை முறையாக பல் விளக்குவதன் மூலம் வெளியேற்ற வேண்டும்.

நாக்கு வழிப்பான்: "டங்க் க்ளீனர்" என்று அழைக்கப்படும் நாக்கைச் சுத்தம் செய்யும் சாதனத்தின் அருமை பலருக்குத் தெரியாது. பல் விளக்கும்போது நாக்கையும் சுத்தம் செய்தால் வாய் துர்நாற்றத்தை 85 சதவீதம் தடுக்கலாம். பிரஷ், டங்க் க்ளீனர் வாங்குவதில் எல்லாம் கணக்குப் பார்க்காதீர்கள். தரமான பொருள்களையே வாங்கி உபயோகியுங்கள்.

தண்ணீர்... தண்ணீர்: நிறைய தண்ணீர் குடியுங்கள். தினமும் 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். வாய் துர்நாற்றத்திற்கும் தண்ணீருக்கும் என்ன சம்பந்தம்? அதிகமாக தண்ணீர் குடித்தால்தான் உடலில் நீர்ச்சத்து அதிகரிக்கும். வாயிலும் தேவையான அளவு உமிழ்நீர் சுரக்க வேண்டும். நீங்கள் தண்ணீர் அதிகமாக குடிக்கவில்லையென்றால், உடலில் நீர்ச்சத்து குறைந்து உமிழ்நீர் சுரப்பது குறையும் உமிழ்நீர் சுரப்பது குறைந்து வாய் உலர்ந்துவிட்டால் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் பற்றீரியாக்கள் வாயில் குடி கொண்டுவிடும். உமிழ்நீர்தான் வாயின் சுகாதாரத்திற்காகப் போர்புரியும் வீரர்கள்.

மல்லி... கொத்து மல்லி: கொத்துமல்லி இலைகளை மென்று தின்றால் வாய்துர்நாற்றம் விடைபெறும். கொத்து மல்லி இலைகள் வாயில் உமிழ்நீர் சுரப்பதைத் தூண்டுகிறது. மேலும் வாயில் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் பற்றீரியாக்களையும் அலசி வெளியேற்றுகிறது. வேப்பிலை, வேப்பங்குச்சிகளையும் மெல்லலாம்.

சூயிங்கம்: ஏலக்காய், பட்டை, புதினா சுவையுள்ள சூயிங்கங்களை மெல்லவும் செய்யலாம். இந்த வகை சூயிங்கங்களை எப்போதும் கைவசம் வைத்திருப்பது நல்லது. சூயிங்கங்கள் வாயில் எச்சில் ஊறுவதை அதிகரிக்கிறது.

தேனீர் குடியுங்கள்: உங்கள் சாப்பாட்டுக்குப் பின்பு ஒரு தேனீர் குடித்தால் வாய் துர்நாற்றம் எளிதில் உங்களைத் தாக்காது. அதுவும் இஞ்சித் தேத்தண்ணி என்றால் மிகவும் நல்லது. சீரகம் சேர்த்த தேனீரையும் அருந்தலாம். வெறும் சீரகத்தைக் கூட மெல்லலாம். வாய் துர்நாற்றத்தை உடனடியாக நீக்குவதற்கு சீரகம் உதவும். சில உணவுக் கடைகளில் தட்டில் வைத்திருப்பார்கள்.

அதிக பசி: சிலர் அதிக பசியோடு வெகுநேரம் இருப்பார்கள். தங்களுக்கு ஆக வேண்டிய வேலையை முடித்துவிட்டுத் தான் சாப்பிடுவதாக சபதம் எடுத்துக் கொள்வார்கள். அதிக நேரம் பசியோடு இருந்தால் வாய் துர்நாற்றம் ஏற்படும். எனவே குறிப்பிட்ட சமயத்தில் சாப்பிட முடியாதவர்கள் சிறிய தின்பண்டங்களையாவது இடையிடையே சாப்பிட வேண்டும்.

**குறிப்பு:**

- வாய் துர்நாற்றம் 10,000 வகைப்படும் என நிபுணர்கள் வகைப்படுத்துகின்றனர்.
- உங்கள் வாயில் துர்நாற்றம் வீசுகிறதா என்பதை பரிசோதிக்க உங்கள் மனைவி/கணவனை வைத்து பரிசோதிக்கச் சொல்லுங்கள்.
- வாய் துர்நாற்றத்தைக் கண்டுபிடிக்க குழந்தைகள்தான் பொருத்தமானவர்கள் அவர்கள்தான் உண்மையை சரியாகச் சொல்வார்கள்.
- உங்களை நீங்களே பரிசோதிக்க உங்கள் மணிக்கட்டில் சிறிது எச்சிலை வையுங்கள் ஐந்து வினாடிகள் கழித்து அதனை முகர்ந்து பாருங்கள்.
- ஒருவர் தன்னுடைய வாய் துர்நாற்றத்தை மேற்கூறிய பரிசோதனைகளால் அல்லாமல் தாமாகவே உணர முடியாது.

## பாரதி எழுதாத பாடல்



மகாகவி பாரதியார் எழுதாத பாடல் தாலாட்டுப் பாடல்தான். இதுபற்றி அவரிடம் கேட்டபோது, "தமிழர்களுக்குத் தற்போது தேவையானது தாலாட்டுப் பாடல்கள் அல்ல" என்று உணர்ச்சி பொங்கக் கூறியுள்ளார்.

## சினிமா சினிமா



➤ மங்காத்தாவுக்குப் பிறகு வெங்கட்பிரபு இயக்கும் பிரியாணி படம் சஸ்பென்ஸ் மற்றும் த்ரில்லர் கலந்து உருவாகிறது. கதைப்படி படத்தில் கார்த்திக்கு ஜோடியாக இரண்டு நாயகிகள். ஒருவர் ஒஸ்தி பட நாயகி ரிச்சா. மற்றொரு நாயகியாக சமந்தா அல்லது இலியானாவை நடிக்க வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த முயற்சி பலனளிக்கவில்லை. இப்போது, காக்டெயில் பட நாயகி டயானா பென்டியை நடிக்க வைக்க முயற்சி நடைபெறுகிறது.




➤ விஷ்ணுவர்தன் இயக்கத்தில் அஜித் நடிக்கும் புதிய படத்தில் உதவி இயக்குநராக அவதாரம் எடுத்திருக்கிறார் நயன்தாரா. "உதவி இயக்குநராக ஆசை" என விஷ்ணுவிடம் தன் ஆசையை நயன் தெரிவிக்க, நடிப்பு நேரம் போக காட்சி அமைப்பு, கதை விவாதம் எல்லாவற்றிலும் கலந்து கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறாராம் விஷ்ணு.

➤ "அந்தி மழை பொழிகிறது.... ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிறது...." என்ற பாடல்தான் நடிகர் கமல்ஹாசனுக்காக கவிஞர் வைரமுத்து எழுதிய முதல் பாடல். "ராஜபார்வை" படத்தில் இடம் பெற்ற இந்த பாடலில் வரும் "தாவணி விசிறிகள் வீசுகிறேன்" ...என்ற வரியை இப்போதும் கமல்ஹாசன் சிலாகித்துப் பேசுவாராம்.



➤ சிங்கம் படத்தின் இரண்டாம் பாகத்தையும் எடுக்கவிருக்கிறார் ஹரி. இதில் சூர்யா இரண்டு வேடங்களில் நடிக்கிறார். ஜோடி ஹன்சிகா. சூர்யா இப்போது நடிக்கும் மாற்றான் படத்தை முடித்ததும் சிங்கம் - 2 இல் நடிக்கிறார். கதை தூத்துக்குடியில் தொடங்கி தென்னாபிரிக்காவில் முடிகிறதாம். தென்னாபிரிக்காவில் கறுப்பர் ஒருவரும் தூத்துக்குடியில் முகேஷ் ரிஷியும் வில்லன்கள். நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்தப் படத்தில் மனோரமா நடிக்கிறார்.





➤ சென்னை - மாமல்லபுரம் வீதியில் முட்டுக்காடு பகுதியில் பிரம்மாண்ட பங்களா கட்டி குடியேறி விட்ட சிம்ரன், அந்தப் பகுதியில் உள்ள பள்ளியில் தன் இரு மகன்களையும் படிக்க வைத்திருக்கிறார். தன் வீட்டில் இருந்து சிறிது தூரமே இருக்கும் அந்தப் பள்ளிக்கு நடந்தே சென்று தன் மகன்களை விட்டு வருகிறார். பிரச்சினை என்னவென்றால் காலை மற்றும் மாலை வேளைகளில் சிம்ரனை பார்ப்பதற்கென்றே அங்கு ஒரு கூட்டம் கூடி விடுகிறது.

## ஆறிலும் சாவு நூறிலும் சாவு


"ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்பதை ஆறு வயதிலும் சாவு, நூறு வயதிலும் சாவு என்று பொருள் கொள்கிறோம். அது தவறு. குருஷேத்திரப் போருக்கு முன்னதாக தாய் குந்தியிடம் கர்ணன் கூறுகிறான், "தாயே! நான் பாண்டவர் ஐவருடன் சேர்ந்து ஆறாவது ஆளாகப் போரிட்டாலும் சரி, அல்லது கௌரவர்கள் நூறு பேரோடும் சேர்ந்து நூறாவது ஆளாக (துரியோதனனுக்கு முன்னர்) போரிட்டாலும் சரி, மடிவது திண்ணம். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு எப்படிச் செத்தால் என்ன? செஞ்சோற்றுக் கடன் கழிக்க என்னை வளர்த்து ஆளாக்கிய துரியோதனனிடமே இருந்து உயிரை விடுவேன்" என்றான். அதிலிருந்துதான் இந்தச் சொற்றொடர் ஏற்பட்டது.



## BAKER'S DOZN




சாதாரணமாக ஒரு டசின் என்பது 12 ஐக் குறிக்கும். ஆனால் பேக்கர்ஸ் டசின் என்பது 13. அந்தக் காலத்தில் பாண் தயாரிப்பதற்குக் கடுமையான சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்தன. அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிறைக்குக் குறைவாக பாண்கள் இருந்தால் கடும் தண்டனை விதிக்கப்படும். அதற்குப் பயந்து தப்பித் தவறி நிறை குறைந்திருக்கப் போகிறதோ என்ற பயத்தில் ஒரு டசினுக்கு 12 இற்குப் பதிலாக 13 பாண்கள் கொடுப்பார்களாம். அதிலிருந்துதான் பேக்கர்ஸ் டசினுக்கு 13 எண்ணிக்கை வந்தது.



எரிமலைகள் மனித குலத்துக்குக் கேடு விளைவிப்பவை என்று முடிவு கட்டிவிடலாகாது. பூமியில் மனித குலம் தோன்றியதில் எரிமலைகளின் வாயுக்களும் மின்னல்களும் முக்கிய பங்களித்துள்ளதாக நிபுணர்கள் கருதுகின்றனர். தவிர, எப்போதோ எரிமலைக் குழம்புகள் வழிந்தோடிய நிலங்கள் பயிர் விளைச்சலுக்கு மிகவும் உகந்தவையாகக் கருதப்படுகின்றன. பல சமயங்களிலும் பாதுகாப்பைக் கருதி எரிமலை அடிவாரங்களிலிருந்து மக்களை வெளியேற்ற முற்பட்டால் அவர்கள் வெளியேற மறுப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம்.

# சூரியன் உதிக்காமல் போனால்...

என்.ராமதுரை

**தமிழ்** வார இதழொன்றில் கேள்வி-பதில் பகுதியில் ஒருமுறை படித்தது :

கேள்வி: சூரியன் உதிக்காமலே போனால் என்ன ஆகும்?

பதில்: ரொம்ப ஜாலி. படுக்கையிலிருந்து எழுந்திருக்க வேண்டிய அவசியமில்லை...

வேடிக்கையாக பதில் தரப்பட்டுள்ளது. சூரியன் உதிக்காமல் போவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் சூரியனிடமிருந்து வழக்கமாகக் கிடைக்க வேண்டிய வெப்பம் கிடைக்காமல் பல வார காலம் அல்லது பல மாத காலம் தூசு மண்டலம் சூரியனை மறைத்தபடி இருப்பதற்கு நிச்சயம் வாய்ப்புள்ளது. அப்படியான நிலைமை ஏற்பட்டால். விபரீத விளைவுகள் ஏற்படும். பூமி ஒரேயடியாகக் குளிர்ந்துவிடும். இதை எரிமலையால் ஏற்பட்ட குளிர் பருவம் (Volcanic winter) என்பர்.

கோடையில் நல்ல வெயில் அடிக்க வேண்டிய பருவத்தில் பனிப்பொழிவு (Snowfall) இருக்கும். பயிர்கள் பொய்த்து விடும். மக்கள் உணவுக்குத் திண்டாடும் நிலைமை ஏற்பட்டுக் கலவரங்கள் மூளும். மக்கள் பட்டினியால் சாவார்கள். குளிர் வாட்டும். நோய்கள் பெருகும். இப்படியாக அடுககிக் கொண்டே போகலாம். இது வெறும் ஊகம் அல்ல.

உண்மையில் இப்படியான நிலைமை 1816 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அதாவது அப்போது சூரியன் மறைக்கப்பட்டது. இந்தோனேசியாவில் உள்ள தம்போரா (Tambora) என்ற எரிமலையே அதற்குக் காரணம். அதற்கு முந்தைய ஆண்டில்(1815) தம்போரா எரிமலை பயங்கரமாக வெடித்தது. 5000 ஆண்டுகளில் காணபபடாத பிரம்மாண்டமான வெடிப்பு அது. அந்த எரிமலையிலிருந்து பெரும் புகை வெளிப்பட்டது. கோடானு கோடிதொன் தூசு வெளிப்பட்டது.

இத்தூசு வானில் 40 கிலோ மீற்றர் உயரத்துக்குச் சென்றது. தூசு மேகங்கள் மேற்கு நோக்கி நகர்ந்தன. விரைவில் அவை பூமியைப் போர்த்துக் கொண்டன. சூரியன் பெரிதும் மறைக்கப்பட்டது. கறுப்புக் கண்ணாடியால் பார்த்தால் தெரிவது போல சூரியன் மங்கலான வட்டமாகத் தெரிந்தது.

வானில் இருந்த தூசு காரணமாக சூரியன் வெவ்வேறு சமயங்களில் பச்சை நிறத்தில், செம்மஞ்சள் நிறத்தில் அல்லது நீல நிறத்தில் தெரிந்தது.

தூசு மண்டலத்தால் சூரியன் மறைகப்பட்டபோது வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கோடைகாலம் ஆனால் நல்ல வெயில் அடிப்பதற்குப் பதில் கடும் குளிர் வீசியது. நியூயோர்க் உட்பட வட அமெரிக்கக் கண்டத்தில் பல இடங்களில் பனிப் பொழிவு (Snowfall) இருந்தது. பயிர்களை படர் பனி (Frost) தாக்கியது. பயிர்கள் பொய்த்தன. ஐரோப்பிய நாடுகளும் இதே போல கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

1815 ஆம் ஆண்டில் தம்போரா எரிமலை பயங்கரமாக வெடித்தது. 5000 ஆண்டுகளில் காணப்படாத பிரம்மாண்டமான வெடிப்பு அது. அந்த எரிமலையிலிருந்து பெரும் புகை வெளிப்பட்டது. கோடானு கோடி தொன் தூசு வெளிப்பட்டது. இத்தூசு வானில் 40 கிலோ மீற்றர் உயரத்துக்குச் சென்றது. தூசு மேகங் கள் மேற்கு நோக்கி நகர்ந்தன. விரைவில் அவை பூமியைப் போர்த்துக் கொண்டன. சூரியன் மறைக்கபட்டது. கறுப்புக் கண்ணாடியால் பார்த்தால் தெரிவது போல சூரி யன் மங்கலான வட்டமாகத் தெரிந்தது.

ஐரோப்பாவில் பல நாடுகளில் உணவுப் பஞ்சத்தால் கலவரங்கள் வெடித்தன. நோய்களால் ஏராளமானவர்கள் உயிரிழந்தனர். மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பருவ மழை பொய்த்ததாகத் தகவல்கள் கூறுகின்றன. ஆகவே 1816 ஆம் ஆண்டை கோடையே இல்லாத ஆண்டு என்று கூறுவர்.

தம்போரா எரிமலை வெடித்ததற்குப் பின்னர் அதே இந்தோனேசியாவில் 1883 ஆம் ஆண்டில் கிரகடோவா எரிமலை (Krakatoa) வெடித்தது. அப்போது ஏற்பட்ட தூசு முகில் பூமியை பல முறை சுற்றி வந்தது. கிரகடோவா வெடித்ததால் ஏற்பட்ட நிலைமைகள் அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை.

அதே இந்தோனேசியாவில் உள்ள டோபா எரிமலை (Toba) இன்னும் மோசம். அந்த எரிமலை சுமார் 73



ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பயங்கரமாக வெடித்தது. அப்போது தோன்றிய பிரம்மாண்டமான எரிமலை சாம்பல் வடமேற்கு நோக்கி நகர்ந்து இந்தியாவைக் கப்பியது. இந்த எரிமலையின் வாய் இப்போது பெரிய ஏரியாக உள்ளது.

இந்தியாவில் பல இடங்களில் நிலத்துக்கு அடியில் நிபுணர்கள் தோண்டிப் பார்த்த போது சுமார் 15 சென்ரிமீற்றர் கனத்துக்கு எரிமலைச் சாம்பல் காணப்படுகிறது. நிபுணர்கள் தோண்டிய இடங்களில் ஆந்திரத்தில் உள்ள ஜுவாலாபுரம் என்ற இடமும் ஒன்றாகும். இங்கு காணப்பட்ட சாம்பல் படிவு டோபா எரிமலை வெடித்த போது வெளிப்பட்ட சாம்பலே என்று நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

டோபா எரிமலை வெடிப்பினால் உலகம் முழுவதிலும் கடும் பாதிப்புகள் ஏற்பட்டன. உலகின் மக்கள் தொகை வெறும் 10 ஆயிரத்துக்கு குறைந்தது என்று நிபுணர்கள் சிலர் கூறுகின்றனர். இதைப் பற்றி சர்ச்சை உள்ளது என்றாலும் பெரும்பாலான மக்கள் அழிந்தனர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. டோபா வெடிப்பினால் ஐரோப்பா அருகே உள்ள ஐஸ்லாந்திலும் அமில மழை பெய்தது. இந்த பெரும் வெடிப்பைத் தொடர்ந்து பூமி குளிர்ந்தது. அதைத் தொடர்ந்து பனி யுகம் தோன்றியது.

தம்போரா, கிரகடோவா மற்றும் டோபா எரிமலைகள் பூமிக்குள் சில்லுகள் புதையும் இடங்களில் அமைந்துள்ளவை. சில்லுப் பெயர்ச்சியால் மனித குலத்துக்கு ஏற்படக்கூடிய மிகப் பெரிய ஆபத்து எரிமலை வெடிப்பால் பூமியை தூசுப் படலம் சூழ்ந்து கொள்வதே ஆகும்.

இன்று தம்போரா எரிமலை அமைதியின் வடிவமாக இருக்கிறது. டோபா எரிமலை ஏரி வடிவில் அமைதியாக உள்ளது.

இவற்றை வைத்து எரிமலைகள் மனித குலத்துக்குக் கேடு விளைவிப்பவை என்று முடிவு கட்டிவிடலாகாது. பூமியில் மனித குலம் தோன்றியதில் எரிமலைகளின் வாயுக்களும் மின்னல்களும் முக்கிய பங்களித்துள்ளதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

தவிர, எப்போதோ எரிமலைக் குழம்புகள் வழிந்தோடிய நிலங்கள் பயிர் விளைச்சலுக்கு மிகவும் உகந்தவையாகக் கருதப்படுகின்றன. பல சமயங்களிலும் பாதுகாப்பைக் கருதி எரிமலை அடிவாரங்களிலிருந்து மக்களை வெளியேற்ற முற்பட்டால் அவரகள் வெளியேற மறுப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். ஆகவே எரிமலைகளை மனித குலத்தின் எதிரி என்றும் சொல்லிவிட முடியாது.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட கேள்விக்கு மீண்டும் வருவோம்.

சூரியன் உதிக்காமலே போனால் என்ன ஆகும்?

பூமி தனது அச்சில் சுழல்வதால் தான் நமக்கு சூரிய உதயமும், அஸ்தமனமும் நிகழ்கின்றன. பூமி தனது அச்சில் சுழல்வது நின்று விடுவதாக வைத்துக் கொண்டால், சூரிய உதயமே இருக்காது. பூமியின் ஒரு பாதியில் வானில் சூரியன் நிலை குத்தி நிற்கும் (பூமி உருண்டை என்பதால்). அங்கு என்றென்றும் பகலாகவே இருக்கும். அப்படியான நிலையில் சூரியனின் வெப்பம் தாங்காமல் அனைத்தும் பொசுங்கிப் போய்விடும்.

பூமியின் மறுபாதியில் என்றென்றும் இரவாக இருக்கும். சூரிய வெப்பம் இல்லாமல் போய்விடுவதால் கடும் குளிர் வீசும். அனைத்தும் உறைந்து போய் விடும். பயிர்கள் வளராது. மக்கள் குளிரில் விறைத்து



மடிந்து போவர். அல்லது பட்டினியால், நோய்களால் செத்து மடிவர். மொத்தத்தில் பூமியில் உயிரினமே இருக்காது. பூமி செத்து விடும். பூமி தனது அச்சில் சுழன்று, அதனால் சூரிய உதயமும் அஸ்தமனமும் இருந்தால் தான் பூமியில் உயிரினம் இருக்க முடியும். சூரியன் இல்லை யேல் - அதாவது பகலும் இரவும் இல்லையேல் - உயிரினமே இராது. உயிர் வாழ்க்கையின் ஆதாரமே சூரியன் தான்.

'ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்' - இளங்கோவடிகள், சிலப்பதிகாரம்.

# சிறைச்சாலையில் நிலவும் பிரச்சினைக்கு வெளித் தொடர்புகளே காரணம்

## - கைதி ஒருவரின் தாயார் ஆதங்கம்

(சிகரம்)

வெளியிலிருந்து சிலர் மேற்கொண்ட தவறான தூண்டுதலாலேயே வவுனியா சிறைச்சாலையில் அண்மையில் அனர்த்தம் ஏற்பட்டு தமிழ் சிறைக்கைதிகள் பாதிப்படைய நேரிட்டதாக சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர் ஒருவரின் தாயார் தெரிவித்தார்.

சிறைச்சாலைக்கு வெளியேயிருந்து சிலர் இவர்களைத் தூண்டியதாலேயே சிறைக் காவலருக்கு எதிரான பணயப் போராட்டத்தில் கைதிகள் ஈடுபட்டதாகவும், இதனால் வீணாக அவர்களே பாதிக்கப்பட்டதாகவும் அந்தத் தாய் வேதனையுடன் கூறினார்.

சிறைச்சாலைகளில் ஒழுங்காக இருந்த எங்கட பிள்ளைகளுக்கு ஏற்பட்டவெளித் தொடர்புகளாலதான் பிரச்சினைகள் உருவாகுது. இப்ப கடைசியாக எங்கடை பிள்ளைகளுக்குத்தான் மேலும் பிரச்சினை ஏற்பட்டிருக்கு என்றார். அந்தத் தாய்.

யுத்த காலத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தங்களுடைய குடும்பத்தினருடன் வெகு விரைவில் இணைவோம் என்ற நம்பிக்கையுடன் இன்னமும் சிறையில் வாடுகின்றார்கள். இவர்களது நம்பிக்கையில் தற்போது மண் விழுந்துள்ளதாக அந்தத் தாயார் கூறினார்.

சிறைச்சாலைகளில் முன்னர் வெளித் தொடர்புகள் மிகக் குறைவு எனக் குறிப்பிட்ட அவர், தற்போது தொலைபேசியினூடாக வெளியிலிருந்து தொடர்புகளை ஏற்படுத்தும் சிலர் சிறைச்சாலையிலுள்ள கைதிகளைத் தவறான பாதையில் தூண்டி விடுவதாகவும், இதனால் தமக்கு விடுதலை கிடைக்கும் என நினைக்கும் கைதிகள் சிறைச்சாலை அதிகாரிகளுடன் முரண்படுவதாகவும் தெரிவித்தார்.

இவரது மகன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 7 வருடங்கள் ஆகியுள்ளது. சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தன்னுடைய மகனைப் பார்ப்பதற்காக 3 வருடங்களாக இவர் வவுனியாவிலுள்ள பெறாமகள் ஒருவருடன் வசித்து வருகின்றார்.

முன்னர் மூன்று மாதங்களிற்கு ஒருதடவை மகனைச் சென்று பார்த்து வந்ததாகக் குறிப்பிட்ட இவர், தற்போது ஒவ்வொரு மாதமும் சென்றுவருவதாகவும் குறிப்பிட்டார். தற்போது தன்னுடைய மகன் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், சிறைச்சாலையிலிருந்து தனது மகன் எப்போது குடும்பத்துடன் இணைவேன் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருப்பதாகவும் அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

கடந்த மாதம் வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்ட அசம்பாவிதத்தினைத் தொடர்ந்து வவுனியா சிறைச்சாலையிலிருந்த கைதிகளில் சிலர் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். அத்துடன், இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வவுனியாவைச் சேர்ந்த கணேசன் நிமலரூபன் என்ற கைதி உயிரிழந்திருந்தார்.

வெளியிலிருந்து சிலர் ஏற்படுத்திய தவறான வழிநடத்தல்களே இந்தத் துரதிர்ஷ்டச் சம்பவத்துக்குக் காரணம் என்று கூறும் இந்தத் தாயார், இதனால் இப்போது தமது பிள்ளைகளின் விடுவிப்பு மேலும் காலதாமதமாகலாம் என்று கவலையடைந்துள்ளார்.

# கருத்தரங்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வலயக் கல்வி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தர கலைப் பிரிவு மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் தமிழ், வரலாறு, இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு துறை சார்ந்த வளவாளர்களினால் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. 120 மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். (04)

# போட்டியில் வெற்றி

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 11 மாணவி யஸ்வினி வணிகப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இம்மாணவி கோட்ட மற்றும் வலய மட்டங்களில் மேற்படி போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று மாகாணப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். (104)

# திருத்தப்படாத நிலையில் வற்றாப்பளை சனசமூக நிலைய வீதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - வற்றாப்பளை சனசமூக நிலையத்திற்குச் செல்லும் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி தண்ணீரூற்று, வித்தியானந்தாக் கல்லூரி முல்லைத்தீவு தபால் கந்தோர் ஆகியவற்றுக்குச் செல்லும் மிக குறுகிய வீதியாக காணப்படுவதுடன் இவ்வீதியின் இருமருங்கிலும் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

தற்போது இவ்வீதி குண்டும் குழியுமாக சேதமடைந்துள்ளதால் வாகனத்தில் பயணம் செய்வோரும் மற்றும் நடையாகவும் துவிச்சக்கர வண்டிகளில் பயணம் செய்வோரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இதைவிட இவ்வீதியால் நாளாந்தம் அதிகளவான மக்கள் பயணத்தை மேற்கொள்கின்ற நிலையில் இவ்வீதி மோசமடைந்திருப்பதால் தாம் கஷ்டப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான இவ்வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)


# இரவு பகலாக இடம்பெறும் யாழ். புகையிரத வீதிப் பணிகள்


(சிகரம்)

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான புகையிரதப் பாதை அமைக்கும் பணிகள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி புகையிரத நிலையம் அமைந்திருந்த வளாகத்திலே நடைபெறும் இந்தப் பணிகளுக்கென, இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் பொறியியலாளர்களும், இலங்கை புகையிரதச் சேவைப் பகுதியினரும் கிளிநொச்சியில் முகாமிட்டுள்ளதுடன், இரவு பகலாக புகையிரதப் பாதை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

2013இல் யாழ். தேவி புகையிரதச் சேவையை ஆரம்பிக்கும் நோக்கிலேயே இந்தப் பாதைப் புனரமைப்பு நடைபெறுவதாக புகையிரதச் சேவையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.






# என்னதான் நடக்குது?

## பெரியோரை மதிப்போம்



இளம் பிள்ளையள் ஒண்டும் பெரியாக்கள் சொல்லுறதைக் கேட்டு நடக்குதுகள் இல்லை இந்தக் காலம் போற போக்கைப் பார்த்தால் இது எங்கை போய் முடியப்போகுதோ தெரியேல்லை என்று ஒரு பெரியவர் மிகுந்த கவலையோடை சொன்னார் இப்பிடிச் சொல்லக்கேட்பது ஒன்றும் புது விசயமில்லை.இந்தக் காலத்திலை வயது போனவர்கள் எல்லோரும் சொல்லிற கதைதான பாருங்கோ. இளமட்டங்களிடம் இதைப் பற்றிக் கேட்டால் சும்மா உந்தப் பழங்காலத்துச் சனங்கள் உப்பிடித்தான் கதைக்குங்கள். நவீன உலகத்தைப் பற்றித் தெரியாத உதுகளின்ரை கதையைக் கேட்டு நடக்கேலுமே. அந்தக் காலத்துக் கதையளை இப்ப சொல்லிக்கொண்டு இருந்தால் சரியே? எண்டு அவர்கள் கேட்கிறார்கள்

இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்த காலம் போல இப்போது இல்லை. இது உண்மை. விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்கள் வாழ்ககையில் மனிதரிடம் மிகவும் ஆதிக்கம் செலுத்துவதைக் காண்கிறோம். எதிலும் எங்கும் நவீனத்தின் ஆதிக்கம் நடைஉடை பாவனை,உணவு வகைகள் வாகனங்கள எண்டு. எல்லாவற்றிலும் நவீனம். விஞ்ஞான வளர்ச்சியினால் உலகமே மிகவும் சுருங்கிவிட்டது. வலை அமைப்பின் மூலம் தூரதேசத்திலை இருப்பவரையும் நேரை முகம் பார்த்துக் கதைக் கலாம் இவ்வாறான இந்த வளர்ச்சிக்கு நாங்கள் எங்களை இசைவுபடுத்தவேண்டும். அப்படி இசைவு படுத்தினால்தான் எங்களாலும் இவ்வுலகில் சுலபமாக வாழ முடியும்.

இப்ப இங்கை பிரச்சினை இதுவல்ல உலக வளாச்சிக்கேற்ப மனிதன் மாறுகிறான் மாறிவிட்டான் இதுகளெல்லாம் புறவளர்ச்சி ஆனால்மனிதனின் உள வளர்ச்சியைப் பற்றித் தான்சிக்கலே இருக்கிறது. பழைய காலத்தில் தமிழ் மக்களாகிய எம் மத்தியில் இருந்த பண்புகள் மாறிப்போச்சுது எண்டே பெரிசுகள் குறைசொல்லுதுகள் அந்தக் காலத்திலே வயதிற்கு மூத்தவரின் சொல்லிற்கு மதிப்புக்கொடுத்து நடந்தார்கள் என்பது மிகவம் முக்கியமானது. மூத்தோர் வாக்கு வேதம் போன்றது எண்டு அவர்கள் சொல்வதைத் தட்டாமல் நடந்தார்கள் ஆனால் இப்ப அப்பிடியே? முதியவர்கள், அநுபவசாலிகள் சொல்லுவதை யார் கேட்கிறார்கள். காலத்திற்கு ஒவ்வாத கருத்துகளைத் தான் உவர்கள் சொல்லுகிறார்கள் எண்டு இளம உலகம் சொல்லுது. பண்புகள் பழக்கங்கள் எல்லாம் மாற வேணும் இதைப்பிழையெண்டு ஏன் சொல்லுகிறார்கள் என்று கூறுகிறார்கள்.

அந்தக் காலத்திலை பாருங்கோ வயதுக்கு மூத்தவர்களைக் கண்டால் உயரத்திலை இருந்தால் எழும்பி விடுவார்கள் தகப்பன், சித்தப்பா, மாமா, பேரன் எண்டு தமது உறவினர்கள் முன்னாலை மிகவும் பணிவாகவே நடப்பார்கள் எதிர்த்துக் கதைக்கமாட்டார்கள் வாத்திமாரைக்கண்டால் பயந்து மரியாதை செய்வார்கள் படிக்கிற காலத்திலை மட்டுமல்ல பள்ளிக்கூடப் படிப்பு முடிஞ்ச பின்னும் ஆசிரியருக்கு மிகவும் பயபக்தியோடு மரியாதைகொடுப்பார்கள் இந்தக் காலத்திலை இந்தப் பண்புகள் எல்லாம் இல்லாமலே போய் விட்டது. இது தான் மூத்தவர்களின் மனக் குறையாக உள்ளது.

இந்தப் பண்புகள் இந்தக் காலத்திலை இல்லாமல் போய் விட்டது. என்பது முற்றிலும் உண்மைதான் மூத்தோரை மதிக்காது அசட்டை பண்ணுவது வரவேற்கத்தக்க ஒருவிசயமல்லத்தான் இந்தப் பண்புகள் மாறியதற்குஎன்ன காரணம். இதற்கு இளைய தலை முறையைக் குற்றம் சொல்வது அர்த்தமில்லாதது. அவர்களை வளர்த்தெடுத்தவர்கள் மீதுதான் தவறு இருக்கிறது. சிறு பருவத்திலிருந்தே பிள்ளைகளுக்கு இந்தப் பண்புகளைச் சொல்லிக்கொடுத்துப் பழக்கியிருக்க வேண்டும். அப்படி யார்? பிள்ளைகளை வளர்த்தார்கள் பிள்ளைகளிடம் அன்பு செலுத்தி அவர்களுக்கு இதமாக பாசத்தோடு நற்பழக்கங்களைப் பழக்கத்தவறி விட்டார்கள்.


நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற நிலையும் இடப்பெயர்வுகளும் நிம்மதியாக வாழுவதற்கு வாய்ப்பில்லாதவர்களாக பெற்றோர்களை ஆக்கி விட்டது. இதன் காரணமாக உயிரைக் காப்பாற்றுவதா? பொருள் பண்டங்களைக் காப்பாற்றுவதா? நோய் துன்பத்திற்கு என்ன செய்வது என்றுபல வகையிலும் துன்பப்பட்டுக் குழம்பியவர்களுக்கு பிள்ளைகளுடைய பண்பு வளர்ச்சியைப் பற்றிக் கருத்தெடுக்க வாய்ப்பில்லை இவ்வாறான காரணங்களும் சமூகக்கூட்டிணைப்பு இல்லாது ஒரு சீரானவாழ்க்கை வாழாததும் இவ்வாறான பண்புகள் மறைந்து போவதற்குக் காரணங்களாயின எனலாம்.

நற்பண்புகளை வளர்த்து சமூதாயத்தில் மற்றவர்களை மதிக்கின்ற பண்புக்களை மாணவர் மத்தியில் வளர்ப்பதற்கு பாடசாலைகளிலும் வீட்டிலும் சிறந்த முயற்சி எடுக்கவேணும் பாருங்கோ.

- ரிஷிகர்.

# மக்கள் சேவையில் அமைச்சர் டக்ளஸ்...

## கணினி மென்பொருள் சாதனையாளருக்கு நிதியுதவி



ELATE COMPUTER SYSTEM நிலையத்தின் எதிர்கால வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு நிலையத்தின் நிர்வாகி ஜோன்சன் மற்றும் மென்பொருள் அபிவிருத்தியாளர் ஐங்கரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் வருகை தந்தனர்.

இதன்போது புதிய மென்பொருள் ஒன்றைக் கண்டு பிடித்து கணினி உலகில் சாதனைபுரிந்த குறிப்பிட்ட நிறுவனத்தின் நிர்வாகி மற்றும் மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகியோருக்கு தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்ட அமைச்சர் முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபாவை மகேஸ்வரி நிதியத்தினூடாக வழங்கி வைத்தார்.

நிறுவனத்தின் வளர்ச்சிக்காக மேற்குறிப்பிட்ட நிறுவனத்தினர் ஆறு இலட்சம் ரூபாவைக் கோரி யிருந்தமையும், இவர்கள் இருவரும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குப்பைப்பிட்டி மக்கள் சந்திப்பு



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைசசர் டக்ளஸ் தேவானந்தாவை. யாழ்ப்பாணம் குப்பைப்பிட்டி பகுதி மக்கள் சந்தித்து தமது கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வருகை தந்த இம்மக்கள் வாழிடம் தொடர்பில் தாம் எதிர் நோக்கிவரும் இடர்பாடுகள் குறித்து அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

மக்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் அடுத்த மாதம் முதல் வாரத்தில் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அதுவரை யில் பொறுமைகாக்கும்படியும், தற்போது இருக்கும் இடங்களை விட்டு வெளியேற வேண்டாம் எனவும் இது தொடர்பில் பொலிஸாருக்கு பணித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது ஈபிடிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), யாழ்ப்பாண பிரதேச செயலாளர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம், ஈபிடிபியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பாடசாலை விடுதிகள் திறப்பு

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பெண்கள் விடுதியைச் சூழவும் மதில் கட்டுவதற்கான நிதியுதவி உடனடியாக வழங்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

கனகரத்தினம் மத்தி மகா வித்தியாலயத்தில் ஆண்கள், பெண்களுக்கான விடுதிகளை திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் உரையாற்றும் போது 80 ஆண்டுகால வரலாற்றைக்கொண்ட இப்பாடசாலையில் இருந்த ஆண்கள், பெண்களுக்கான விடுதிகள் கடந்த 22 ஆண்டுகாலமாக செயலிழந்து காணப்பட்ட நிலையில் அவற்றை மீளவும் புனரமைப்புச் செய்வது தொடர்பில் பாடசாலைச் சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இவ் விடுதிகள் புனரமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளன.

முன்பதாக பாடசாலையில் பிரதான வாயிலிலிருந்து தமிழர்களின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழ் இன்னிய அணி வகுப்புடன் அமைச்சர் உள்ளிட்ட அதிதிகள் நிகழ்விடத்துக்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து புனரமைக்கப்பட்ட ஆண்கள் பெண்களுக்கான விடுதிகள் திறந்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் ஞானகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மகிந்த சிந்தனைக்கு அமைவாக பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேச்சுப போட்டியில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவி கோபிகாவுக்கு பதக்கம் அணிவித்ததுடன், பணப்பரிசும் வழங்கிக்கௌரவித்தார்.

இந்நிகழ்வில் ஈபிடிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) பதில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் உதயகுமார், பழைய மாணவர் சங்கத் தலைவரும், யாழ்.மாநகரசபை உறுப்பினருமான விஜயகாந்த், ஈபிடிபியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் ரவீந்திரதாசன், யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மோகனதாஸ் உள்ளிட்ட கல்விப்புலம் சார்ந்த பலரும் உடனிருந்தனர். (02)



### பெண்கள் விடுதியின் சுற்று மதிலுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக புனரமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட பெண்கள் விடுதியின் சுற்றுமதில் அமைப்பதற்கான நிதியுதவியை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிவைத்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் பாடசாலை அதிபர் ஞானகாந்தனிடம் அமைச்சர் காசோலையை வழங்கிவைத்தார்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கென புனரமைக்கப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான விடுதிகள் கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் அவர்களிடம் மேற்படி பாடசாலைச் சமூகம் சுற்றுமதில் அமைப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபா தேவையெனவும், அதனைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தது.

அதற்கமைய அப்பணத்தை தருவதாக உறுதியளித்த அமைச்சர் அவர்கள் மகேஸ்வரி நிதியத்தினூடாக முதற்கட்ட கொடுப்பனவாக ஒரு இலட்சம் ரூபா காசோலையை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## வலிகாமம் கல்வி வலய ஆங்கில தினப் போட்டிமுடிவுகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகளின் தொடர்ச்சி...

குழுப்பாட்டு

தரம் - 6 - 9

1 ஆம் இடம் யாழ்ப்பாணக் கல்லூரி, 2 ஆம இடம் உடுவில் மகளிர் கல்லூரி,3 ஆம் இடம் இளவாலை சென்.ஹன்றிஸ் கல்லூரி.

தரம் - 10 - 13

1 ஆம் இடம் உடுவில் பெண்கள் கல்லூரி, 2 ஆம் இடம் யாழ்ப்பாணக் கல்லூரி, 3 ஆம் இடம இளவாலை திருக்குடும்ப கன்னியர் மகா வித்தியாலயம்.

நாடகம்

கீழ்ப்பிரிவு

1 ஆம் இடம் உடுவில் மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம், 3 ஆம் இடம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி மகா வித்தியாலயம்.

மத்திய பிரிவு

1 ஆம் இடம் உடுவில் மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம், 3 ஆம் இடம் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

மேல் பிரிவு

1 ஆம் இடம் வட்டு இந்துக் கல்லூரி.

நாடகம்

1 ஆம் இடம் இணுவில் மத்திய கல்லூரி.

விவாதம்

தரம் 10 - 13

1 ஆம் இடம் யாழ்ப்பாணக்கல்லூரி

(முற்றும்)

(06)

## வாக்களிப்பு மோசடிகளை தடுக்குமாறு கோரிக்கை

சிவில் பாதுகாப்பு படை முகாம்களில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் போது இடம்பெறும் தேர்தல் மோசடிகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுக்கு எழுத்து மூலம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரொஹான் ஹெட்டியாராச்சி தெரிவித்தார். குறித்த இடங்களில் தேர்தல் மோசடிகள் இடம்பெறுவது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த தேர்தலின் போது சிவில் பாதுகாப்பு படை முகாம்களில் தேர்தல் மோசடிகள் இடம்பெற்றதாக முறைப்பாடுகள் கிடைத்தன. இதனாலேயே இந்த சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாத வண்ணம் இருப்பதற்காகவே அதிக கவனம் செலுத்துகின்றோம்.

இதனால், குறித்த சம்பவங்கள் இடம்பெறுவதை தடுப்பதற்காக சிவில் பாதுகாப்பு படை முகாம்களில் அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையங்களில் குறைந்தது ஒரு சுயாதீன கண்காணிப்பாளரை அனுமதிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

Grade - 12

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

02 | T | II

GIT


நேரம் : 2 மணித்தியாலம்

கல்வி முரசு

A.J. Nimalrajan
(mcse, ccna)

*(சென்றவாரத் தொடர்ச்சி).....*

4. **(I)**. ஒரு சைக்கில் பந்தய ஓட்டத்தில் பங்குபற்றும் சைக்கிளோட்டிகள் ஒரு மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைவதன் மூலமும் பின்னர் ஒரு வட்டப் பாதையில் பத்து சுற்றுக்களை நிறைவேற்றுவதன் மூலமும் தொடக்க சுற்றிலிருந்து இறுதிச் சுற்றுக்கு தகைமை பெற வேண்டும். மருத்துவச் சோதனையில் சித்தியடையாதவர்கள் ஓட்டப் பாதையில் பத்து சுற்றுக்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஓட்டப்பாதையில் 10 சுற்றுக்களை பூர்த்தியாக்குபவர்கள் இறுதிச் சுற்றில் பங்குபற்றுவதற்கு தகுதியுடையவர்களாவர். களைப்புற்று ஓட்டப்பாதையில் 10 சுற்றுக்களை பூர்த்தி செய்ய முடியாதவர்கள் போட்டியிலிருந்து விலக்கப்படுவர். மேற்குறித்த காட்சியிலிருந்து பெறப்பட்ட பொருத்தமான பதங்களை முறையே பயன்படுத்தி உரு 6 இல் உள்ள பாய்ச்சல் கோட்டுப்படத்தில் (a), (b), (c), (d), (e), (f) ஆகியவற்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.




பாய்ச்சல் கோட்டுப்படத்தில் சில ஆங்கிலப்

Pass medical test மருத்துவச் சோதனையில் சித்தியா?

Number of rounds சுற்று எண்ணிக்கை

Continue to next round அடுத்த சுற்றுக்கு செல்வதா?


Pass perliminary stage முதற்கட்டத்தில் சித்தி

Eliminated from the contest போட்டியிலிருந்து விலக்கப்படுதல்

(II). வகுப்பில் மாணவர் புள்ளிகளை வாசிப்பதற்கும் சராசரி (Average), உயர்வு (Max) இழிவு (Min) எனக் காட்சிப் படுத்துவதற்குமான நெறிமுறையை உரு 7 இல் உள்ள பாய்ச்சல் கோட்டுப் படம் காட்டுகின்றது.

> பாய்ச்சல் கோட்டுப் படத்தில் சில ஆங்கில பதங்களுக்கான தமிழ் கருத்துக்கள்
> Input no.of student as
> மாணவர் எண்ணிக்கையை n என கருதுக
> Input student marks m
> மாணவர் புள்ளியை M என உள்ளீடு செய்க
> sum கூட்டுத்தொகை

மேற்குறித்த காட்சிக்காக பாய்ச்சல் படத்தில் தருக்கத்திற்கான போலிக் குறிமுறையை எழுதுக.




பாய்ச்சல் கோட்டுப்படத்தில் சில ஆங்கிலப் பதம்

| | |
|---|---|
| Pass medical test | மருத்துவச் சோதனையில் சித்தியா? |
| Number of rounds | சுற்று எண்ணிக்கை |
| Continue to next round | அடுத்த சுற்றுக்கு செல்வதா? |
| Pass perliminary stage | முதற்கட்டத்தில் சித்தி |
| Eliminated from the contest | போட்டியிலிருந்து விலக்கப்படுதல் |

5. உமது பெற்றோர் உமக்காக ஒரு புதிய மேசைக் கணினியை (Desktop Computer) வாங்கியுள்ளதாக கற்பனை செய்க. பெற்றோர் உமது கணினிக்கு இணையத்தொடுப்பையும் ஏற்பாடு செய்யவுள்ளனர்.

(I). உமது கனினியை இணையத்துடன் தொடுக்கும் நீர் எதிர்நோக்கத் தக்க இரு சாத்தியமான அச்சுறுத்தல்களை சுருக்கமாக விபரிக்க.

(II). அத்தகைய அச்சுறுத்தல்களில் இருந்து கணினியை பாதுகாக்கும் இரு முறைகளை விபரிக்க.

(III). இக்கணினியை பயன்படுத்தும் போது எழத்தக்க சுகாதாரப் பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு நீர் கருத்தில் கொள்ளும் மூன்று காரணிகளை சுருக்கமாக விளக்குக.

1) கமலினுடைய வயது 35 ஆகும். சரத் 2 வருடங்கள் கமலைவிட இளையவன். அவர்களுடைய வயதுகளை துவித எண்களில் சரியாக காட்டுவது
   1. கமல் 100011, சரத் 100010
   2. கமல் 100011, சரத் 100100
   3. கமல் 100010, சரத் 100001
   4. கமல் 100101, சரத் 100011

2) கீழே தரப்பட்டுள்ளவற்றில் பதின் அறும (Hexadecimal) இலக்க முறை தொடர்பான கூற்றுக்களை கருத்திற் கொள்க.
   a. குறியீட்டு இலக்கங்கள் 15, அத்துடன் இலக்கம் 11ஐ பிரதிநிதித்துவப்படுத்துவது A இனால்
   b. குறியீட்டு இலக்கங்கள் 16, அத்துடன் இலக்கம் 10ஐ பிரதிநிதித்துவப்படுத்துவது A இனால்
   c. குறியீட்டு இலக்கங்கள் 16, அத்துடன் இலக்கம் 13ஐ பிரதிநிதித்துவப்படுத்துவது D இனால்
   d. குறியீட்டு இலக்கங்கள் 15, அத்துடன் இலக்கம் 14ஐ பிரதிநிதித்துவப்படுத்துவது E இனால்

   இவற்றில் சரியான கூற்றுக்கள் எவை?
   1. a யும் d யும்
   2. b யும் c யும்
   3. b யும் d யும்
   4. எல்லாம் சரி

3) தர்க்கப்படலை ஒன்றின் உள்ளீடுகள் A,B யும் வெளியீடு A+B யும் ஆகும். குறிப்பிட்ட தர்க்கப்படலை தொடர்பான தவறான கூற்று

1. இரு உள்ளீடுகளும் வித்தியாசப்படும் போது வெளியீட்டு பெறுமதி 1
2. இரு உள்ளீடுகளின் பெறுமதி 1 ஆக இருக்கும் போது வெளீயீட்டு பெறுமதி 1
3. இரு உள்ளீடுகளின் பெறுமதி 0 ஆக இருக்கும் போது வெளியீட்டு

பெறுமதி 1
4. இரு உள்ளீடுகளின் பெறுமதி 0 ஆக இருக்கும் போது வெளியீட்டு பெறுமதி 0

4) மிகவும் விரைவாக தரவு கடத்தும் தொடர்பாடல் ஊடகம் யாது?
1. காப்பிடப்படாத முறுக்கிணை கம்பி (UTP Cables)
2. இழை ஒளிவம் (Fiber optics)
3. காப்பிடப்பட்ட முறுக்கிணை கம்பி (STP Cables)
4. இணையச்சு வடம் (Coaxial Cables)

5) பொதுவாக LAN இல் உபயோகிக்கப்படும் வழிப்படுத்தப்படாத (wireless) தொடர்பாடல் ஊடகங்கள் யாவை?
a. Micro waves
b. Radio waves
c. infra – red
d. Satellite

1. a , b என்பன மாத்திரம்
2. a , d என்பன மாத்திரம்
3. b , c என்பன மாத்திரம்
4. c ,d என்பன மாத்திரம்

6) 'Modem' தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களில் மிகவும் சரியான கூற்று
1. அனைத்து தரவு தொடர்பாடல்களிலும் பயன்படுத்தப்படும் கருவியாகும்
2. பல்வேறுபட்ட கணினிகளை தொடர்புபடுத்தும் ஓர் கருவியாகும்
3. கணினிகளை வெளிவாரியாக இணைப்பதற்கு மட்டும் பயன்படுத்தும் கருவியாகும்
4. தொலைத்தொடர்பாடல் இணைப்புக்கள் மூலம் தரவு தொடர்பாடலிற்கு பயன்படும் கருவியாகும்.

7) பின்வருவனவற்றுள் வலையமைப்பு ஒன்றில் உபயோகிக்கப்படும் ஒரு சாதனம் / கருவி அல்லாதது எது?
1. Scanner 2. Server
3. Switch 4. Network interface card

8) கணினித் தலைமுறை வழியாக மாற்றமடைந்து செல்லும் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன
(a) பௌதீக அளவு
(b) மின்சார நுகர்வு
(c) நிரற்படுத்தியின் வேகம்
(d) வெப்பம் வெளியிடும் தன்மை

கணினித் தலைமுறை வழியாக படிப்படியாக குறைவடைந்து செல்லும் பண்புகள் எவை?
1. a யும் b யும் c யும் 2. a யும் b யும் d யும்
3. a யும் c யும் d யும் 4. b யும் c யும் d யும்

9) தனியாள் கணினியின் CPU வில் உள்ளடக்கப்படும் பகுதிகள் பின்வருவனவற்றில் எது?
1. Main memory and control unit (CU)
2. Arithmatic and logic unit (ALU) and Main memory
3. Arithmatic and logic unit and Control unit
4. Arithmatic and logic unit, Control unit and Main memory

10) P,Q உள்ளீடுகள் தொடர்பான முழுமையான உண்மை அட்டவணை (truth table) கீழே காட்டப்பட்டுள்ளன.

| P | Q | P.Q | P+Q |
|---|---|---|---|
| 0 | 1 | | |
| 0 | 0 | | |
| 1 | 1 | | |

P.Q , P+Q என்பனவற்றின் சமமான வெளியீட்டு பெறுமதிகளை P,Q என்பவற்றின் எச் சந்தர்ப்பத்தில் பெறப்படும்?
a) P,Q என்பவற்றின் உள்ளீட்டு பெறுமதிகள் '0' ஆகும்போது
b) P,Q என்பவற்றின் உள்ளீட்டு பெறுமதிகள் '1' ஆகும்போது
c) P,Q என்பவற்றின் பெறுமதிகள் வேறுபட்டிருக்கும் போது
1. a யும் b யும் மட்டும்
2. a யும் c யும் மட்டும்
3. b யும் c யும் மட்டும்
4. a, b, c எல்லாம்


11) பின்வரும் கணினி வகைப்படுத்தல் தொடர்பானவற்றில் எந்த வகைப்படுத்தல் எல்லா கணினிகளிற்கும் பொருத்தமற்றது?
a) Super / mainframe / mini / micro
b) Digital / Analog / hybrid
c) Personal / laptop / palmtop
d) General purpose / special purpose

1. a 2. b 3. c 4. d

12) கணினி மென்பொருள் தொடர்பான இரு பிரதான வகைப்படுத்தல் களானவை
1. Operating Systems and Compilers
2. Systems software and application software
3. Tailor made software and packaged software
4. Command line operating systems and graphical user interface operating system


13) பின்வருவனவற்றில் கணினி மென்பொருள் தொடர்பான தவறான வகைப்படுத்தல் முறை
1. மனித / கணினியை அடிப்படையாகக் கொண்ட முறைமை மூலம் வகைப்படுத்தல்
2. தொழிற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தல்
3. வெவ்வேறு முகாமைத்துவ மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தல்
4. தரவு செய்முறை மற்றும் தொடர்பாடல் வேகம் என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டு வகைப்படுத்தல்

14) தரப்பட்ட பாய்ச்சற்கோட்டு வரைபடத்தின் வெளியீடு யாது?




1. 2
2. 3
3. 4
4. 5

15) தரப்பட்ட பாய்ச்சற்கோட்டு வரைபடத்தை உபயோகித்து வினா 15, 16 இற்கு விடையளிக்குக.




தரப்பட்ட பாய்ச்சற்கோட்டு வரைபடத்தில் Processing, Output என்பவற்றை முறையே சரியாக காட்டுவது.
1. c = c-2, x=x+c
2. x = x+c, print x
3. Print x, c= c-2
4. c< 7, Print x

16) தரப்பட்ட பாய்ச்சற்கோட்டு வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு கட்டமைப்பு வகை யாது?
1. Repetition, Sequence
2. Sequence, Iteration
3. Iteration, Selection
4. Sequence, Selection

17) குறிப்பிட்ட சில Operating systems இலகுவசமாக தரவிறக்கம் செய்யப்பட்டு உபயோகிக்க முடியும். இதன் Source Code உம் இலவசமாக பெறலாம். பின்வருவனவற்றில் எது மிகவும் பொருத்தமான பணிசெயல் முறைமை (OS) ஆகும்?
1. DOS 2. Ubuntu
3. Windows XP 4. Mac OS

18) பின்வருவனவற்றில் முறைமை மென்பொருள் (System Software) அல்லாதது எது?
1. Antivirus Software
2. Spread sheets software
3. Device drivers software
4. Operating systems software

19) பின்வருவனவற்றில் Folders தொடர்பான தவறான கூற்று
1. Folders உருவாக்கப்படவும் அழிக்கப்படவும் முடியும்
2. Folders ஆனது வேறொரு இடத்திற்கு (another position) நகர்த்தப்பட முடியும்
3. Folder இன் கொள்ளளவும் வகையும் பார்க்கக் கூடியதாக இருக்கும்
4. Folder இன் கொள்ளளவானது ஒரு குறிப்பிட்ட பெறுமதிக்கு மாற்றப்பட முடியும்

20) ஓர் மின்விரிதாளில் B3 ஆனது Current cell ஆக இருக்கும் போது D6 I active cell ஆக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை
a) Press On the Keyboard twice and then press Key thrice
b) Press on the Keyboard twice and then press key thrice
c) move the mouse pointer to D6 and then press left mouse button once

1. a யும் b யும் மட்டும் சரி
2. b யும் c யும் மட்டும் சரி
3. a யும் c யும் மட்டும் சரி
4. a,b,c அனைத்தும் சரி

(தொடரும்....)

# அசாமில் இனக்கலவரம்; கண்டதும் சுட உத்தரவு



(கோக்ராஜ்கர்)

அசாம் மாநிலம் கோக்ராஜ்கர், துப்ரி மாவட்டங்களில் முஸ்லிம் களுக்கும், போடோ பழங்குடி இனமக்களுக்கும் இடையே கடந்த 3 நாட்களுக்கு முன்பு திடீரென மோதல் ஏற்பட்டது.

இந்த மோதல் மிகப்பெரும் இனக்கலவரமாக வெடித்தது. மக்கள் இருபிரிவாக பிரிந்து கடும் வன்முறையில் ஈடுபட்டனர். கிராமங்களுக்குள் புகுந்து ஒருவரை ஒருவர் சரமாரியாக தாக்கினார்கள்.

போடோ பழங்குடி மக்களில் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதும். இந்த வன்முறை கட்டுக்கடங்காதபடி மாறியது. 3 நாட்களாக நடந்த வன்முறை சம்பவங்களில் 19 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


வன்முறை நீடிப்பதால் கிராமங்களில் வாழும் மக்கள் கடும் பீதியில் உள்ளனர். ஏராளமான கிராம மக்கள் உயிருக்கு பயந்து வீடுகளை காலி செய்து விட்டு அடர்ந்த காடுகளுக்குள் பாதுகாப்பு தேடி சென்று விட்டனர்.

இராணுவ வீரர்களும், உள்ளூர் பொலிஸாரும் தீவிர ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வன்முறையில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கண்டதும் சுட்டுத்தள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கலவரம் மற்ற பகுதிகளுக்கு பரவுவதை தடுப்பதற்காக கூடுதல் இராணுவ படை அசாம் மாநிலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எல்லை பாதுகாப்பு படையைச் சேர்ந்த 18 கம்பெனி இராணுவ வீரர்கள் பதற்றமான கிராமங்களில் நிறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே இரு தரப்பினருக்கும் சமரசம் செய்ய பல்வேறு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# இராணுவத்துறையில் முதலீட்டை அதிகரிக்க வலியுறுத்து



(புதுடில்லி)

அமெரிக்க முதலீட்டை அதிக அளவில் ஈர்க்க, இராணுவ துறைக்கான அன்னிய நேரடி முதலீட்டு வரம்பை இந்திய அரசு அதிகரிக்க வேண்டும் என, அமெரிக்க இராணுவ துணை அமைச்சர் ஆஷ்டன் கார்டர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக டில்லியில் அவர் கூறியதாவது:உயர் தொழில் நுட்ப விவகாரங்களில், இந்தியா - அமெரிக்கா இடையே இராணுவ ஒத்துழைப்பு அதிகரிக்க வேண்டும். அதற்கு நிர்வாக ரீதியான தடைகள் அகற்றப்பட வேண்டும். அமெரிக்க முதலீட்டை அதிகளவில் ஈர்க்க, இராணுவ துறையில், அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை, இந்திய அரசு அதிகரிக்க வேண்டும். இராணுவ துறையில், தற்போது 26 சதவீத அளவுக்கு, அந்நிய நேரடி முதலீட்டை இந்திய அரசு அனுமதிக்கிறது. இது 74 சதவீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் என்பது சர்வதேச நிறுவனங்களின் விருப்பம். இவ்வாறு ஆஷ்டன் கார்டர் கூறினார். முன்னதாக அவர், இராணுவ அமைச்சர் அந்தோணி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், வெளியுறவு செயலர் ரஞ்சன் மத்தாய், இராணுவ செயலர் ஷஷிகாந்த் சர்மா ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

# தமிழக மீனவர்களைக் காக்க கச்சதீவைக் கைப்பற்றவேண்டும்

## — தா. பாண்டியன் —


(சென்னை)

கச்சதீவை இந்தியா உடனே கைப்பற்ற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள். எத்தனையோ தூதுக்குழுக்கள், அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை, அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுவிட்டன. எந்தப் பயனும் கிடைக்கவில்லை. பொழுது போக்கில் ஈடுபடுவதைப்போல, மீண்டும் படகுகள் கடத்தபடுவதும், மீனவர்கள் கொல்லப்படுவதும் தொடர் கதையாகிவிட்டது.

மீனவர்கள் கொல்லப்படுவதை தடுப்பதற்கு ஒரே வழி கச்சத்தீவை மீண்டும் கைப்பற்றுவது தான் என்பதை தமிழக சட்டமன்றம் ஏக மனதாக தீர்மானமாக இயற்றியுள்ளது. இதைப்பற்றிய எந்த பதிலையும் இது நாள்வரை மத்திய அரசு வெளியிடவில்லை. மீனவர்களையும் படகுளையும் கடத்தியதை வன்மையாக கண்டிக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி கச்சத் தீவை உடனடியாக மீட்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது என்று தெரிவித்துள்ளார்.

## இந்தியச் செய்திகள்




# காந்தி கொல்லப்பட்டது திரைக்கதையாகிறது

(சென்னை)

மகாத்மா காந்தியை கோட்சே சுட்டுக் கொன்றது சினிமா படமாகிறது. மலையாளத்தில் இப்படத்தை எடுக்கின்றனர். தமிழிலும் வெளியிட படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர். இதில் கோட்சே வேடத்தில் பிருதிவிராஜ் நடிக்கிறார். ஷாஜி கைலாஜ் இயக்குகிறார்.

பிருதிவிராஜ் வைத்து ஷாஜி கைலாஸ் தற்போது சிம்ஹாசனம் படத்தை இயக்கி வருகிறார். இப்படம் முடிந்ததும் கோட்சே படத்தை எடுக்கின்றனர்.

கோட்சேயின் வாழ்க்கை சம்பவங்கள் இதில் காட்சிப்படுத்தப்படுகின்றன. அவனது குடும்ப சூழல்கள் காந்தியை கொல்ல வகுத்த திட்டங்கள் போன்றவை படமாக்கப்படுகிறது.

இதுகுறித்து ஷாஜி கைலாஸ் கூறும்போது, கோட்சே படம் உணர்வுபூர்வமான திரைக்கதையில் உருவாகிறது. காந்தியை கொல்வதற்கு முந்தைய நாள் கோட்சேயின் மனநிலையும் உணர்வு போராட்டங்களும் எப்படி இருந்தது என்பதை திரைக்கு கொண்டு வருகிறோம். நல்லதுக்கும், கெட்டதுக்கும் போராட்டத்தை கருவாக வைத்து இந்த படத்தை எடுக்கிறோம். குற்றச்செயலில் ஈடுபடுவதற்கு முன் கோட்சேயின் மனநிலை எப்படி இருந்தது என்பதையும் படத்தில் சொல்கிறோம் என்றார்.

# ஜெகன்மோகனின் தாயாரின் வாகனம் மீது தாக்குதல்



(ஐதராபாத்)

ஆந்திர மாநிலம் தெலுங்கானா பகுதியில் உள்ள கரீம்நகர் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு ஆதரவாக ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டியின் தாயார் விஜயலட்சுமி தலைமையில் நேற்று உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

தனித்தெலுங்கானாவுக்கு ஆதரவு தெரிவிக்காத ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் தெலுங்கானா பகுதியில் இந்த போராட்டத்தை நடத்த தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்தநிலையில் விஜயலட்சுமி பலத்த பொலிஸ் பாதுகாப்புடன கரீம் நகர் மாவட்டத்துக்கு புறப்பட்டார். செல்லும் வழியில் அவரது வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் அங்கிருந்து சென்ற அவர் மதியம் சிர்சில்லா பகுதியை சென்றடைந்தார்.

அங்கு அவர் உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார். இந்த உண்ணாவிரத்தில் ஏரா்ளமான ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தொண்டர்களும் கலந்து கொண்டனர். போராட்டம் நடந்தபோது தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி கட்சியினருக்கும், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தொண்டர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இருதரப்பினரும் ஒருவருக்கொருவர் கல் வீசி தாக்கிக் கொண்டனர்.

இதையடுத்து விஜயலட்சுமி 2 மணி நேரத்துக்குள் தனது போராட்டத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். விஜயலட்சுமி போராட்டம் காரணமாக தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி எம்.எல்.ஏ.க்கள் ஹரிஷ்ராவ், ராமாராவ் ஆகியோர் முன்எச்சரிக்கையாக கைது செய்யப்பட்டனர்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..............................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்தை - தினமுரசு 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# அந்நிய செலாவணி மோசடி; ஆந்திர அமைச்சருக்கு பிடியாணை

ஆந்திர மந்திரியாக இருப்பவர் கே.பார்த்தசாரதி. இவர் ஐத ராபாத்தில் கே.பி.ஆர். டெலிபு ராடக்ட்ஸ் மற்றும் கே.பி.ஆர். பிளாஸ்டிக்ஸ் உள்ளிட்ட பல் வேறு நிறுவனங்களை நடத்தி வருகிறார்.

கடந்த 2002ஆம் ஆண்டு தனது நிறுவனத்துக்கு ரூபா50 இலட்சத்திற்கு இயந்திரங்கள் வாங்கினார். இதில் அவர் அந்நியசெலாவணி மோசடி செய்ததாக புகார் எழுந்தது.

இதையடுத்து அமுலாக்கத் துறை அதிகாரிகள் அவர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அப்போது மந்திரி பார்த்த சாரதி அந்நிய செலாவணி மோசடி செய்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து அவருக்கு அமுலாக்கத்துறை அதிகாரிகள் ரூபா 3 இலட்சம் அபராதம் விதித்தனர். ஆனால் அவர் அபராதம் செலுத்த மறுத்துவிட்டார்.

இதையடுத்து பார்த்த சாரதி மீது உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி அமுலாக்கத்துறை சிறப்பு நீதிமன்றில் அத்துறை அதிகாரிகள் மனுத்தாக்கள் செய்தனர். இவ்வழக்கு விசாரணை கடந்த சில ஆண்டுகளாக நடந்தது. இவ்வழக்கு



விசாரணையின்போது மந்திரி பார்த்தசாரதி ஆஜராக வில்லை. இதையறிந்ததும் நீதிபதி, மந்திரி பார்த்தசாரதிக்கு கடும் கண்டனம் தெரிவித்தார். பின்னர் பார்த்த சாரதியை நீதிமன்றில் ஆஜராகும்படி பிடி ஆணை பிறப்பித்தார்.

# உலகின் மிக உயரமான பகுதிக்கு பேருந்து சேவை ஆரம்பம்

உலகின் மிக உயரமான பகுதிக்கு சீனா பேருந்து போக்குவரத்தை தொடங்கி உள்ளது.

பூமியின் கூரை என அழைக்கப்படும் திபெத் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்குள்ள மிக உயரமான பகுதி என்காரியாகும்.



கடல் மட்டத்திலிருந்து சுமார் 4,500 மீற்றர் உயரத்தில் உள்ள என்காரி பகுதியில் குக்கிராமங்கள் அதிகம் காணப்படுகின்றன. இந்த பகுதிகளுக்கு தினமும் ஆறு பேருந்துகளை இயக்க சீன அரசு முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து சென்கி சாங்போ என்ற நகரிலிருந்து, மூன்று தடங்களில் என்காரிக்கு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

ஏற்கனவே திபெத் தலைநகர் லாசாவுக்கும், சென்கி சாங்போ நகருக்கும் நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பேருந்து போக்குவரத்துக்கு, உள்ளூர் வர்த்தகர்கள் மூலம் 2 கோடி ரூபாய் திரட்டப்பட்டு சாலை வசதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் வர்த்தகம் மேம்பாடு அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இராணுவ ஹெலிகொப்டர் மலை மீது மோதி விபத்து



துருக்கியில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று மலை மீது மோதி விபத்துக்குள்ளானதில், 4 பேர் பலியாயினர்.

துருக்கிக்கு சொந்தமான எஸ்-70 என்ற ரகத்தை சேர்ந்த இராணுவ ஹெலிகாப்டர் வீரர்களை ஏற்றிக் கொண்டு, தென்கிழக்கே இருக்கும் ஹாக்காரி மாகாணத்திலுள்ள மலைப்பகுதி வழியாக பறந்து கொண்டிருந்தது.


அப்போது ஹெலிகொப்டர் இயங்கும் சக்தியை திடீரென்று இழந்ததால் விமானி அதை தரையிறக்க முயன்றார். ஆனால் அது மலை மீது மோதி நொறுங்கியது.

இந்த விபத்தில் 4 வீரர்கள் பலியானார்கள், 8 பேர் படுகாயங்களுடன் உயிர் தப்பினர். விபத்து நடந்த இடத்திற்கு மீட்பு குழுவினர் விரைந்துள்ளனர்.

# 18 இடங்களில் குண்டுவெடிப்பு; ஈராக்கில் 107 பேர் உயிரிழப்பு

## – 214 பேர் படுகாயம்





(பாக்தாத்)

ஈராக்கில் நேற்றுமுன்தினம் 18 இடங்களில் நடந்த வெடிகுண்டு தாக்குதல்களில், 107 பேர் பலியாகியுள்ளனர். ஈராக்கின் வடகிழக்கில் உள்ள உதய்ம் என்ற இடத்தில், மூன்று வாகனங்களில் வந்த தீவிரவாதிகள், அங்கிருந்த இராணுவ முகாம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில், 13 வீரர்கள் கொல்லப்பட்டனர். தாஜி என்ற இடத்தில், ஆறு குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்துள்ளன. இதில் அப்பாவி மக்கள், 42 பேர் கொலலப்பட்டுள்ளனர். பாக்தாத் அருகே உள்ள சதார் நகரில், அரசு கட்டடத்தில் குண்டு வெடித்துள்ளது. கிர்குக் நகரில் ஏழு கார் குண்டுகள் வெடித்துள்ளன. மேற்கண்ட சம்பவங்களில், மொத்தம், 107 பேர் பலியாகியுள்ளனர். 214 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

# சீனாவைத் துரத்தும் கட்டாயக் கருக்கலைப்பு



மக்கள் தொகை பெருகி வருவதால், ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தையே போதும் போன்ற கட்டுப்பாடுகளை சீனா அரசு விதித்துள்ளது.

இதனை மீறி ஒரு சில தம்பதிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப குழந்தைகள் பெற்று வருகின்றனர்.

சட்டத்தை மீறி அதிக குழந்தை பெற்றால் ஒவ்வொரு குழந்தைக்கும் அபராதம் செலுத்த வேண்டும். ஆனால் அவ்வாறு அபராதம் செலுத்த முன்வந்தும் அப்பாவி தம்பதியின் 3ஆவது குழந்தையை வலுக்கட்டாயமாக கருக்கலைப்பு செய்துள்ளனர் அரசு ஊழியர்கள். இச்சம்பவம் சீனாவில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

சீனாவில் உள்ள தாஜி என்ற கிராமத்தைச் சேர்ந்த பான் சுன் யான் என்ற 31 வயதான பெண்ணுக்குத் தான் அந்தக் கொடுமை நடந்துள்ளது.

3ஆவது குழந்தைக்கு தாயான அந்தப் பெண், 8 மாத கர்ப்பமாக இருந்த போது, உள்ளூர் அதிகாரிகள் அவரை பிடித்து, தனி அறையில் 2 பெண்களுடன் சேர்த்து அடைத்து வைத்தனர்.

பின்னர் 4 நாட்களுக்குப் பிறகு அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று கருக்கலைப்பு செய்ய ஒப்புக்கொண்டதாக கட்டாயப்படுத்தி விரல் ரேகை மூலம் ஒப்புதல் பெற்றனர். அப்போது அவருக்கு ஒரு தாதி ஊசி மூலம் மருந்து செலுத்தியுள்ளார். அதன்பிறகு சிறிது நேரத்தில் குழந்தை இறந்தே பிறந்தது.

அக்குழந்தையின் உடல் முழுவதும் கறுப்பு மற்றும் நீல நிறமாக இருந்ததாக குழந்தையின் தாய் பான் கண்ணீர் மல்க கூறியுள்ளார்.

# ஒரே நேரத்தில் 10,000 பேருக்கு கொலை மிரட்டிய எஸ்.எம்.எஸ்



அவுஸ்ரேலியாவில் 10,000 பேருக்கு ஒரே நேரத்தில் SMS மூலம் கொலை மிரட்டல் வந்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அவுஸ்ரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் மாகாணத்திலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.


அந்த SMS,ல், உங்களைக கொல்வதற்காக ஒருவர் எனக்கு பணம் கொடுத்துள்ளார். நீங்கள் 48 மணிநேரம் எடுத்துக் கொள்ளுங்கள். அதற்குள் எனக்கு 5,000 டொலர் அனுப்ப வேண்டும்.

இதை பொலிஸிடமோ அல்லது வேறு யாரிடமோ கூறினால் நீங்கள் கொல்லப்படுவீர்கள். killerking247@yahoo.com என்ற முகவரியில் தொடர்பு கொண்டு உடனடியாக எனக்கு பணம் அனுப்பவும் என கூறப்பட்டிருந்தது.

இந்த SMS-ஐ அனுப்பியவர் யார் என்பது குறித்தும், எங்கிருந்து அனுப்பப்பட்டது என்பது குறித்தும் பொலிஸார் தற்போது விசாரித்து வருகின்றனர்.

எனினும் இதில் உண்மையில்லை என்றும், இது குறித்து மக்கள் கவலைப்பட தேவையில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இரசாயன ஆயுதங்கள் உண்டு; அரசாங்கம் ஒப்புதல்



தங்களிடம் இரசாயன மற்றும் உயிரி ஆயுதங்கள் இருப்பதாக சிரியா அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்து வரும் நிலையில், எல்லைப் பகுதிகளை போராட்டக்காரர்கள் கைப்பற்ற முயற்சித்து வருகின்றனர்.

இவர்கள் இராணுவத்திற்கு எதிராக எரிமலை என்ற பெயரில் போராட்டத்தை நடத்தி வருவதாகவும், தங்கள் மீது இரசாயன ஆயுதங்களை உபயோகிக்க அரசு படைகள் முயற்சிப்பதாகவும் குற்றம் சுமத்தினர்.

இது குறித்து சிரியா நாட்டின் வெளியுறவு அதிகாரி ஜிகாத் மக்டிசி குறிப்பிடுகையில், ஏனைய நாடுகளின் தாக்குதலை முறியடிக்கவே இரசாயன மற்றும் உயிரி ஆயுதங்களை வைத்திருக்கிறோம். இவற்றை போராட்டக்காரர்கள் மீது பயன்படுத்தும் எண்ணம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

போராட்டக்காரர்களின் ஆதிக்கம் உள்ள பகுதிகளை நோக்கி இரசாயன ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படுவதாக சந்தேகித்த அமெரிக்கா, போராட்டக்காரர்கள் மீது இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தக்கூடாது என எச்சரித்தது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# அல்கொய்தாவுடன் தொடர்புடைய ஐந்து பெண்கள் விடுதலை

அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடையதாக எழுந்த சந்தேகத்தின் பேரில், கைது செய்த ஐந்து பெண்களை சவுதி நீதிமன்றம் விடுதலை செய்ய உத்தரவிட்டது.

கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி ஏமன் நாட்டில் பணியாற்றி வந்த சவுதி துணை தூதரக அதிகாரி அப்துல்லா அல் கஹாலிதி கடத்தப்பட்டார்.

இவர் கடத்தலில் அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடையதாக எழுந்த சந்தேகத்தின் பேரில் 5 பெண்களை சவுதி பாதுகாப்புப் படையினர் கைது செய்து, இவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்நிலையில் கடத்தலில் இவர்களுக்கு தொடர்பில்லை என்பதால், விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக உள்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் மன்சூர் அல்டர்கி தெரிவித்தார்.

# புலம்பெயர் தொழிலாளர்களே அதிக வெளிநாட்டு செலாவணியை ஈட்டுகின்றனர்

## அமைச்சர் டிலான் பெரேரா பெருமிதம்





(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு முதலாவது அதிகமான வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தருபவர்களாக புலம்பெயர் தொழிலாளர்களே திகழ்கின்றனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலனோம்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற புலம்பெயர் தொழிலாளர் பிரஜைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான "ரட்டவிருவே அமைப்பு" அங்குரார்ப்பண ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நாட்டிற்கு அதிகமாக அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் இந்தப் புலம்பெயர் தொழிலாளர்களின் சேமநலன்கள் கவனிக்கப்பட வேண்டும் என்ற கூற்றுக்கமைவாக இந்த வேலைத்திட் டம் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.


இந்த "ரட்ட விருவே அமைப்பு" யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக அந்தந்தப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட புலம்பெயர்ந்தவர்களின் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப் படவுள்ளது.

அதில் தலைவர், உபதலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆறு பேர் உட்பட 11 பேர் அங்கம் வகிப்பர். இவர்களில் இருந்து மாவட்ட நிர்வாக அமைப்புத் தெரிவு செய்யப்பட்டு அதிலிருந்து தேசிய நிர்வாக அமைப்புத் தெரிவு செய்யப்படவுள்ளது.

இந்த அமைப்பை ஸ்தாபிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள், சுவரொட்டிகள் போன்றனவும் நேற்றைய நிகழ்வில் அந்தந்தப் பிரதேச செயலாளர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் டிலான் பெரேரா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டதுடன், நிகழ்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலனோன்பு அமைச்சின் ஆலோசகர் அகமட், வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி முகாமையாளர் மங்கள தெந்தெனிய, பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், யாழ். செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினர் கலந்து கொண்டனர். (பா)

# பெரேரா சிறப்புப் பந்து வீச்சு சுருண்டது இந்திய அணி



(அம்பாந்தோட்டை)

பெரேராவின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் இந்திய அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி அபாரமான வெற்றி பெற்றது.

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட" ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி திஸர பெரேராவின் பந்து வீச்சுக்கு ஈடுக்கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒருபுறம் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டபோதும், மறுமுனையில் பொறுமையாக ஆடி இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு கௌதம் கம்பீர் இட்டுச்சென்றார். இறுதியில் இந்திய அணி 33.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 138 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இதில் கௌதம் கம்பீர் அதிகபட்சமாக 93 பந்துகளை எதிர்கொண்டு 65 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். 7 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் திஸர பெரேரா 8 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுக்கு 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், மத்தியூஸ் 7 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுக்கு 14 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்கு 139 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 19.5 ஓவர்களில் 1 விக்கெட்டை இழந்து இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்சான் 49 பந்துகளை எதிர்கொண்டு 50 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றுமொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான உப்புல் தரங்க 60 பந்துகளை எதிர்கொண்டு 59 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டார். போட்டியின் ஆட்டநாயகனாக திஸர பெரேரா தெரிவானார். ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவர்கள்...

சிகிச்சைப் பிரிவின் முன்பாகவும், தமது அலுவலகத்திலும் இவ்வாறு பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் முன்பாக ஒன்றுகூடிய வைத்தியர்கள் சுமார் ஒரு மணி நேரம் ஊழலற்ற நிர்வாகத்தை ஏற்படுத்துவோம், வைத்தியர்களை மிரட்டாதே, நோயாளர்களது பணத்தைக் கொள்ளையடிக்காதே, ஊழல் பணிப்பாளரே வெளியேறு போன்ற சுலோகங்களை உள்ளடக்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர் குழுத்தலைவர் தெரிவிக்கையில், தமது தாய்ச் சங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமையவே நாம் இந்தப் போராட்டத்தை மேற்கொண்டிருப்பதாகவும், தமது கோரிக்கை குறித்து தாய்ச்சங்கம் சுகாதார அமைச்சுடன் பேசி வருவதாகவும், இந்தப் பேச்சுக் களின் முன்னேற்றம் குறித்து எதிர்காலத்தில் தெரிவிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் தமக்கு ஆதரவாக வடபகுதி வைத்தியர்களும் இணைந்திருப்பதாகவும், யாழ். போதனா வைத்தியசாலையின் பல் மருத்துவர்களும் தமது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் அத்தியாவசிய சேவைகள் தவிர, எதுவித வைத்திய சேவைகளையும் நேற்று மேற்கொள்ளவில்லை எனவும் தெரியவருகின்றது.

## சர்வதேச...

இடம்பெறுவதைத் தடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. எதிர்வரும் மாதம் 3ஆம் திகதி நடைபெறும் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில், இது குறித்துப் பேச்சு நடத்தி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளுடன் விசேட சந்திப்பு ஒன்றை நடத்தவும் தேர்தல் ஆணையாளர் திட்டமிட்டுள்ளார். தேர்தல் திணைக்கள அதிகாரிகள் சிலர் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர். சர்வதேச கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியும் இதற்கு முன்னர் கோரியிருந்தமை நினைவூட்டத்தக்கது.

## ஆஸி.நோக்கிய...

அன்னலிங்கம் அன்பழகன் (வயது-23), ஆறுமுகம் கவிதன் (வயது-32), செல்வமோகன் அகிலன் (வயது-18), இராசரத்தினம் குகதாஸ் (வயது-30), கோபாலசிங்கம் முகுந்தன் (வயது-23), கதிரமலை இரகுநாதன் (வயது-22), இரத்தினசிங்கம் ஸ்ரீ(வயது-42), வடிவேல் செல்வக்குமார் (வயது-25), பாலசுப்பிரமணியம் நாகேந்திரன் (வயது-37), நடராசா பேரஞ்சன் (வயது-29), நடராசா (வயது-26) ஆகியோரே ஆவார்.

# சுயவிபரக் கோவையின் ஆவணங்கள் எங்கே?

(சாவகச்சேரி)

தென்மராட்சியிலுள்ள திணைகளம் ஒன்றில் ஊழியர் உத்தியோகத்தர்களின் சுயவிபரக் கோவையில் சில ஆவணங்கள் இல்லாது இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ஆவணங்களை கோவையில் இணைப்பதற்காக காரியாலயத்தில் ஒப்படைக்கும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தினத்திற்கு முன் ஆவணங்களை ஒப்படைக்காத ஊழியர், உத்தியோகத் தர்களின் இம்மாத வேதனம் இடைநிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஓரிரு வருடங்களுக்கு முன்பும் மேற்படி ஆவணங்கள் இல்லாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு எம்மால் ஒப்படைக்கப்பட்டதாகச் சிலர் தெரிவித்தனர்.

சில ஆவணங்கள் தற்போது எடுக்க முடியாத நிலையில் உள்ளதால் தாம் பெரும் சிரமப்படுவதாக அவ்வூழியர்கள் தெரிவித்தனர்.

உதாரணமாக 5 வருடங்களுக்கு முன் இறந்த மனைவியின் தேசிய அடையாள அட்டை புகைப்படப் பிரதி தற்போது கோரப்பட்டுள்ள நிலையில் தம்மால் அதனைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும், ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

இறந்த ஒருவருடைய தேசிய அடையாள அட்டை கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப்படுவதால் தற்போது அப்புகைப்படப்பிரதியைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவே இனிவரும் காலங்களில் ஆவணக் கோவைகளை உரிய முறையில் பேணிப்பாது காக்க திணைக்களம் முன்வர வேண்டும் என உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் தெரிவித்தனர். (11)

## கடற்றொழில்...

படுத்துவதற்காக 50 கோடி ரூபா நிதியினை செலவிட்டுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இலங்கையில் உள்ள மீன்பிடித் துறைமுகப் பகுதிகளை ஆழமாக்குவதற்கான விசேட தொழில் நுட்பத்துடனான கப்பல் ஒன்றை நன்கொடையாக வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன் வந்துள்ளது. இந்த கப்பலின் பெறுமதி 125 கோடி ரூபாவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த பணிகளை மேற்கொண்டு வரும் 'ருகுணு புத்தா' என பெயரிடப்பட்டுள்ள கடலை ஆழமாக்கும் கப்பல் கூட 23 வருடங்களுக்கு முன்னர் ஜப்பானிய அரசாங் கத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தொழில்துறை...

இச்செயலமர்வில் கலாநிதி முத்துக்கிருஷ்ணன் சர்வானந்தன், வடக்கின் பொருளாதாரம், தொழில்துறைக் கட்டமைப்பு மற்றும் தொழில் சந்தை தொடர்பான விரிவுரையொன்றை நிகழ்த்தினார். தொடர்ந்து வடக்கின் பாரம்பரிய மற்றும் நவீன தொழில்சார்ந்த 70 துறைகள் அடையாளம் காணப்பட்டன. இத்துறைகளில் பரீட்சயமானவர்களைக் கொண்ட உப குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக் களிடமிருந்து செயற்றிட்டமானது குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் சாத்தியக்கூற்று அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்படி செயற்றிட்ட வரைபு பூரணமாக்கப்படும். இதேபோன்ற செயலமர்வுகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்களில் நேற்று இடம்பெற்றது.


இன்றைய தினம் வவுனியாவிலும், மன்னாரிலும் இவ்வாறான செயற்றிட்டச் செயலமர்வுகள் நடைபெறவுள்ளது. மொத்தத்தில் வடக்கிற்குப் பொருத்தமானதும், சாத்தியம் அதிகமுள்ளதுமான தொழில் கல்வி மற்றும் அதனூடான தொழில்துறை விருத்தி ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இச்செயற்றிட்டம் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளது.

## தடுப்பூசி...

தமது பிரச்சினைகள் குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்த போதிலும், எவ் வித தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை என தாதிமார் சங்கத்தின் பிரதிப் பிரதம செயலாளர் கூறினார்.

மன்னார் சம்பவம்

# அறிக்கை கிடைத்ததும் சட்டம் தன் கடமையைச் செய்யும்



(மன்னார்)

மன்னார் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை வந்ததும் சம்பவத்துடன் தொடர்புடையதான நபர்களுக்கு எதிராக சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரசாங்கம் என்றவகையில், மேற்படி சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கின்றோம். அத்துடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உரிய பாதுகாப்பு தரப்பினருக்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் நீதியும், நீதிமன்றங்களும் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் என்பது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். மன்னார் விடயத்திலும் நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்படும். உரிய விசாரணை அறிக்கை வந்தவுடன் சம்பந்தப்பட்டவர்கடுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் நீதிமன்றத்தினூடாக எடுக்கப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முற்பகல், கொழும்பிலுள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# சுவரொட்டிகளை அகற்ற ஐந்து மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)


வட மத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் ஒட்டப்படும் சட்டவிரோத போஸ்டர்களை அகற்றவென பொலிஸாருக்கு 5 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

மூன்று மாகாணங்களில் சட்டவிரோத போஸ்டர்களை அகற்ற தேர்தல்கள் செயலகத்தால் இந்நிதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத போஸ்டர்களை அகற்ற தொழிலாளர்களை பயன்படுத்த வேண்டியுள்ளதால் அவர்களுக்கு இந்நிதியூடாக சம்பளம் வழங்கப்படும் என அவர் கூறினார்.

இதேவேளை, சட்டவிரோத தேர்தல் போஸ்டர்கள் ஒட்டும் நபர்கள் குறித்து தகவல் தருமாறு பொலிஸார் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். முறையிடப்பட்டால் உரிய நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# சைபர் குற்றச்செயல்களை தடுக்க இலங்கை – மாலைதீவு இணக்கம்



தெற்காசிய பிராந்திய வலய நாடுகளில் இணையத்தளங்களின் ஊடான குற்றச் செயல்கள் பாரியளவில் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. திட்டமிட்ட சைபர் குற்றச் செயல்களுடன் மாலைதீவு பிரஜைகளுக்குத் தொடர்பு இருப்பதாக அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு பிரஜைகள் இலங்கையில் இணையக் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இணையத்தின் ஊடான நிதி மோசடிகள் அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும், கடன் அட்டை மற்றும் நன்கொடை அடிப்படையில் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றச் செயல்களைத் தடுக்க இரு நாடுகளும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிறைத்தாக்குதலில் மரணமான நிமலரூபனின் இறுதி நிகழ்வு



(வவுனியா)

மரணமான அரசியல் கைதி நிமலரூபனின் இறுதி ஊர்வலம் நேற்று 3.00 மணியளவில் வவுனியா நெளுக்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (160)

# கொழும்பில் பாதசாரிகள் சட்டத்தை மீறினால் நடவடிக்கை

(கொழும்பு)

பொலிஸார் பாதசாரிகள் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தப்போவதாகவும் கொழும்பில் நேற்று முதல் இச்சட்டத்தை மீறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வீதியைக் கடப்பதற்கு பாதசாரிகள் கடவைகள், சுரங்கப்பாதைகள் மேம்பாலங்கள் ஆகியவற்றை பயன்படுத்தாத பொதுமக்கள் இன்றிலிருந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்களெனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

# ‘கட்சி தாவ’ தீர்மானிக்கவில்லை ஐ.தே.க. எம்.பி. தயாசிறி ஜயசேகர

(கொழும்பு)



ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அரசாங்கக் கட்சிக்கு செல்லவுள்ளார் என கொழும்பில் தகவல் கசிந்துள்ளது. இது குறித்துக் கேட்ட போது,

அவ்வாறான தீர்மானம் எதுவும் இல்லை. நான் ஜனாதிபதியை சந்தித்தேன் என்பது பொய்யான வதந்தியாகும். கடந்த பல வருடங்களில் அவரை நான் சந்திக்கவில்லை என தயாசிறி ஜயசேகர கூறினார்.

ஐ.தே.க. தலைவர் பதவிக்கான தேர்தலை 6 வருடங்களுக்கு ஒரு தடவை நடத்தும் வகையில் ஐ.தே.க. யாப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தை தான் கடுமையாக எதிர்ப்பதாக அவர் தெரிவித்தார்.

இது சர்வாதிகாரத்தனமான தீர்மானமாகும். 18 ஆவது திருத்தச்சட்டத்தை நாம் சர்வாதிகரமானது எனக் கூறுகிறோம்.

ஆனால் உண்மையில் அதை நாடாளுமன்றத்திற்கூடாக திருத்த முடியும். எனினும் அவ்வாறான வாய்ப்புகள் ஐ.தே.கவுக்குள் தற்போதைய தீர்மானத்தின்படி கிடையாது எனவும் தயாசிறி ஜயசேகர கூறினார்.

# விவசாயக் குழுக் கூட்டம்

(வேலணை)

வேலணை பிரதேச செயலக மட்டத்திலான விவசாயக் குழுக் கூட்டம் இன்று வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷ் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த விவசாயக் குழுக் கூட்டத்தில் உள்ளீட்டு உரம் விநியோகம், குளங்களின் விபரங்கள், பயன்பாடுகள், விவசாயிகளினது விவசாயக் காப்புறுதி, விவசாயிகள் பெற்ற கடன் விபரங்கள், கால்நடை அபிவிருத்தி, கட்டாக்காலி, தென்னை அபிவிருத்தி, விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற (செய்கை பண்ணப்பட்டுள்ள) பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்கள் பற்றி ஆராயப்படவிருக்கின்றன. (05)

# கிழக்கில் வெற்றி நிச்சயம்



(கொழும்பு)

மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் ஒரே கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாகும். எனவே கிழக்கு மாகாணத்தில் எமது கட்சியின் வெற்றி நிச்சயம் என்று மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் ஏனைய கட்சிகள் ஏதாவது ஒரு இனத்தை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஆனால், ஐ.ம.சு. கூட்டமைப்பு மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அந்தவகையில், அம்பாறையில் சிங்களவர் ஒருவரும் மட்டக்களப்பில் தமிழரும் திருகோணமலையில் முஸ்லிம் ஒருவருமாக மூவினங்களையும் சேர்ந்தவர்களே முதன்மை வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

எனவே மூவின மக்களினதும் வாக்குகளைப் பெற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றிபெறும் என்பதில் ஐயமில்லை. இந்தத் தேர்தல் நீதியானதும் சமாதானமுமான முறையில் நடைபெற்று வெற்றியை எமது கட்சிக்குப் பெற்றுத் தரும் என்றும் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

நேற்று முற்பகல், கொழும்பிலுள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# மரண அறிவித்தல்

## திருமதி மகாலட்சுமி ஆறுமுகநாதர்



வட்டு வடக்கு (பன்னமூலை) சித்தங்கேணியைச் சேர்ந்த திருமதி மகாலட்சுமி ஆறுமுகநாதர் 22.07.2012 ஞாயிற்றுக்கிழமையன்று சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான திரு திருமதி முருகேசு முத்தாச்சிப்பிள்ளை தம்பதியினரின் ஏக புத்திரியும் அமரர்களான திரு திருமதி தம்பையா சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் திரு த.ஆறுமுகநாதரின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் சென். கென்றீஸ் இளவாலை) அன்பு மனைவியும், மகாநாதன் (கனடா), சுரேஷ்குமார் (கனடா), ஸ்ரீதரன் (வர்த்தகர் - திருநெல்வேலி), சாந்தினி (கனடா), ரோகினி (ஆசிரியை - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சிவதாஸ் (கொலண்ட்), மாலினி (ஆசிரியை - காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயம்), ஜெயராணி (ஆசிரியை - உயரப்புலம் குணபால வித்தியாலயம்), Dr.சுமதி (லண்டன்), ஜெயமோகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஜனி (கனடா), சுதர்ஷினி (கனடா), Dr.அனுஷியா (கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை), ராஜதேவன் (கனடா), கிருஷ்ணலிங்கம் (சமுர்த்தி உத்தியோகத்தர் - உடுவில் பிரதேச செயலகம்), லக்ஸ்மன் (ஆசிரியர் - உடுவில் மகளிர் கல்லூரி), ஜெயக்குமார் (முகாமைத்துவ உதவியாளர் - மாகாண சுகாதார அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம்) திருக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அருண், சரணியா, சபித்தா, ஆரூரன், வைஷ்ணவன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், சரண், சஜித்தா, சுபஸ்தி, சுலக்ஷி, தினூஷா, பிரவீன், கபிலாஷ் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள், 26.07.2012 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**திரு. த.ஆறுமுகநாதர் ஸ்ரீதரன்**
**பிரபல வர்த்தகர்**
**திருநெல்வேலி.**
**தொ.பே 0213008706**

**வட்டு வடக்கு,**
**சித்தங்கேணி.** (C/1594)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.